
திருக்கோயில் மே 1992 விலை ரூ.3





வள்ளலார் பணி மன்றத்தின் சார்பில் பதின்மூன்றாம் ஆண்டு இசைக்கலை விழா சென்னை இராணி சீதை மன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் டாக்டர் மு. க. தங்கவேலனார் அவர்கள் இயற்றிய ''சக்தி சரணம் ஆயிரம்'' நூலை அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் ஐ.ஏ.எஸ்., அவர்கள் வெளியிட நூலின் முதற்படியை கீதா உபாசகர் திருமிகு கிரிதாரி பிரசாத் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

முகப்பு:
திருச்செந்தூர்
அருள்மிகு செந்திலாண்டவர் ஆலயம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை. 34 | திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆங்கிரச ஆண்டு வைகாசி<br>மே 1992 விலை ரூ. 3-00 | மணி: 5 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

***உயர்திரு ஆணையர் அவர்கள்***
***இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை***
***சென்னை — 600 034***

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

திருக்கோயில்களைச் சீரமைப்போம்
—மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

அருளாளர்கள் அருள் அனுபவம்
— திருமந்திரச்செம்மல்
டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

லலிதா சகஸ்ரநாமம்
— ஆணையாளர் சுகவனேஸ்வர் ஐ.ஏ.எஸ்.

லிங்க புராணம்
— டாக்டர் இர. நாகசாமி

விதித்த பொருள் நான்கு
— புலவர் பு.மா. ஜெயசெந்தில்நாதன்

தந்தையை மிஞ்சிய தனயன்
— ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்

கலைச் சிறப்புமிக்க கோயில்கள்
— கோயிற் கலைச் செல்வர்
தி. இராச மாணிக்கம்.

பாம்பன் சுவாமிகளும் திருப்போரூரும்
— பேராசிரியர் டாக்டர் ப. இராமன்

நடுநாட்டு வைணவத் திருத்தலங்கள்
— நித்திலக்கோ.

கீதைக்குறள்கள்
— அறநெறியண்ணல்
கி. பழநியப்பனார்.

இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது பெற்ற
இந்து அறநிலையத் துறை ஸ்தபதி.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருககிருபானந்தவாரியார்

சித்திரபாரதம்
— செவ்வேள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# திருக்கோயில்களைச் சீரமைப்போம்

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்**



அறநிலையத் துறை மானிய கோரிக்கை மீது சட்டசபையில் நடந்த விவாதத்துக்கு பதில் அளித்து மாண்புமிகு தமிழக முதல்வர் **டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள் பின் வருமாறு :

நமது பண்பாட்டு பாரம்பரியத்தினைப் பிரதிபலிக்கின்ற திருக்கோவில்கள், நமது கலைப் பொக்கிஷங்களாகும். அவற்றையும், அவைகளுக்குச் சொந்தமான உடமைகளையும் பாதுகாப்பது என்பது, தனது தார்மீகக் கடமையாக இவ்வரசு கருதுகிறது. கடந்த சில மாதங்களாக, கோவில்களில் திருட்டு மற்றும்சிலைகள் உடைக்கப்படுவதாக செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

உறுப்பினர்கள் கூட, இது குறித்து இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்து இருக்கிறார்கள். இவைகளை நிரந்தரமாக தடுத்து நிறுத்த, ஒரு சிறப்பு ஏற்பாட்டை இந்து சமய அறநிலைய மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்குரிய எனது பதிலுரையில் அறிவிக்கின்றேன் என்று தெரிவித்திருந்தேன்.

கோவில்களில் உள்ள விலையுயர்ந்த உலோகத் திருமேனிகளையும், சிலைகளையும் ஆபரணங்களையும் மற்றும் ஆராதனைக்குரிய பொருள்களையும், முழுமையாக பாதுகாப்பதற்காக, காவல் துறையில், **''கோயில் பாதுகாப்புப் படை''** ஒன்று தனியே ஏற்படுத்தப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறப்புப் பிரிவு விரைவில் அமைக்கப்படும்.

ஏற்கனவே சிலை தடுப்புப் பிரிவு என்று ஒரு பிரிவு காவல் துறையில் உள்ளது. சிலைகள் திருட்டுப் போனால், அவற்றைக் கண்டுபிடிக்க இப்பிரிவு செயல்படுகிறது. அதில், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில், ஒரு துணை காவல்துறை கண்காணிப்பாளர், 5 ஆய்வாளர்கள், 3 துணை ஆய்வாளர்கள், 4 தலைமைக் காவலர்கள், 3 முதல்நிலை காவலர்கள், 13 இரண்டாம் நிலை காவலர்கள் ஆக மொத்தம் 30 பேர் மட்டுமே உள்ளனர். அது வேறு இது வேறு. இந்தப் பிரிவு திருட்டுக் குற்றங்களை நடவாமல் தடுப்பதற்கு ஏற்படுத்தப்படும் பிரிவு.

கோவில் பாதுகாப்புப் படை பிரிவில் ஆயிரம் இரண்டாம் நிலை காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் தவிர, மாதம் ரூ. 750 தொகுப்பு ஊதியத்தில 3,000 முன்னாள் ராணுவத்தினரும் இந்தப் பிரிவில் நியமிக்கப்படுவார்கள். பணியில் அமர்த்தப்படும் 1000 இரண்டாம் நிலை காவலர்களுக்கும், 3000 முன்னாள் ராணுவத்தினருக்கும், அவர்கள் பாதுகாப்புக் பணியில் உள்ள நேரங்களில் துப்பாக்கி கொடுக்கப்படும். அவர்கள் காவல் பணி புரியும் கோவில், எந்தக் காவல் நிலையத்தின் எல்லைக்குள் இருக்கின்றதோ அந்தக் காவல் நிலையத்தில் காவலர்களாக பணியில் அமர்த்தப்படுவார்கள். அவர்கள் அங்கிருந்து சென்று அந்த அந்த கோவில்களில் காவல் பணி புரிவார்கள்.

இந்த அமைப்பை ஏற்படுத்த அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5.28 கோடி செலவாகும். இந்தப் பொருள் செலவினை நிதி வசதி இல்

லாத காரணங்களினால், கோவில்கள் முழுமையாக ஏற்க முடியாது என்பதால், மொத்த செலவினத்தில் 10 சதவீதம் தொகையை மட்டும் கோவில்கள் ஏற்கும், மீதமுள்ள 90 சதவீதத் தொகையை, அரசே ஏற்கும், ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், மற்றும் அறநிலைய துறை துணை ஆணையர், அல்லது உதவி ஆணையர் ஆகியோர், அந்தக் கோவில் பாதுகாப்புப் படை காவலர்கள் செய்யும் பணிகளை மாதம் ஒருமுறை ஆய்வு செய்வார்கள். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வணிகவரி மற்றும் அறநிலையத்துறை அரசுச் செயலாளர், மாநில காவல்துறைத் தலைவர், மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர், ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழு, இப்பாதுகாப்புப் படைப் பிரிவின் பணிகளை ஆய்வு செய்யும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களில், மொத்தம் 49,713 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் 4,166 பணியாளர்கள், உதவி ஆணையர் - செயல் அலுவலர், மற்றும் அதற்கு மேல் நிலையில் உள்ள அதிகாரிகளின் கீழ் உள்ள பெரிய கோவில்களில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட அரசு ஊழியர்களுக்கு நிகராக இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

இதர சிறிய கோவில்களின் பணியாளர்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் பணியாற்றும் கோவிலின் வருமானத்தைப் பொறுத்து, ஊதியம் வழங்கப்படுகிறது. மொத்தத்தில், 1959-ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறநிலைய சட்டத்தில் குறிப்பிட்டவாறு, ஆலயத்தின் ஆண்டு வருவாயில் 40 சதவீதத்திற்கு மிகாத அளவு அவ்வாலயத்தினுடைய பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

நலிந்த திருக்கோவிலகளில பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு, நிதியின்மை காரணமாக, ஊதியத் தொகை கொடுப்பதில் ஏற்பட்ட சிரமங்களினால், அவை வழங்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, **பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி** கோவில் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதியாகக் கொண்டு ஆலய ஊழியர் நலத் திட்டம் உருவாக்கப்பட்டது.

அந்த நிதியின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டு வருமானம் ரூபாய் 25,000-க்கு குறைவாக உள்ள ஆலயங்களில் பணிபுரிந்து வரும் மாத ஊதியம் ரூபாய் 300-க்கும் குறைவாகப் பெறுவோருக்கு, ஆண்டு தோறும் ஊதியத் தொகை நிலுவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பல கோவில் பணியாளர்கள் பயனடையும் வகையில், இந்தத் திட்டத்தில் ஆலய வருவாய் வரம்பினை உயர்த்தி, அதாவது ஆண்டு வருவாய் ரூபாய் 40,000 வரை உள்ள கோவில்களில் பணியாற்றும் ரூபாய் 400-க்கு கீழ் மாத சம்பளம் பெறும் நிரந்தர மற்றும் முழு நேரப் பணியாளர்களின் சம்பள பாக்கியும், இந்த ஆண்டு முதல் ஆலய ஊழியர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் சுமார் 500 ஆலய ஊழியர்கள் பயன் பெறுவார்கள். இது தொடர்பாக 1-7-90 முதல் 30-6-91 வரை உள்ள காலத்திற்கான சம்பள பாக்கிகள், உடனடியாக வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன். இதற்காக ரூபாய் 20 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டு உள்ளது.

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, 20 ஆண்டுகள் பணி செய்து, 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற, வேதபாராயணம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், மற்றும் அரையர் சேவை செய்த 100 பேர்களுக்கு ஓய்வு ஊதியமாக மாதம் ரூ. 300 வழங்கப்படும் என்று நான் அறிவித்தேன்.

அத்திட்டம் இப்பொழுது செயல்படுத்தப் படுகிறது என்பதையும், அதே போன்று அர்ச்சகர்களாக 20 ஆண்டு காலம் பணி செய்து 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற 500 அர்ச்சகர்களுக்கு மாதம் ரூ. 300 ஓய்வூதியமாக வழங்கும் புதிய திட்டமும் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 18 லட்சம் செலவாகும்.

கோவில்களில் தற்போது பணிபுரியும் பூசாரிகளுக்கும், அர்ச்சகர்களுக்கும் முறையாக அன்றாட பூசைகளையும் வழிபாடுகளையும் செய்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு **புத்தாக்கப் பயிற்சித் திட்டம்** ஒன்று அறிமுகப் படுத்தப்படும். இதற்காக சுமார் 8 லட்சம் செலவிடப்படும். இத்திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 500 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு நான் பதில் அளித்தபோது வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்று குறிப்பிட்டேன். இதற்கான கருத்துரு ஒன்று இந்து சமய அறநிலையத் துறையினரால் தயாரிக்கப் பட்டு தற்போது அது அரசின்பரிசீலனையில் உள்ளது. வேதங்களைப்பற்றியமுழுமையான அறிவைபுகட்டக்கூடிய கல்விநிலையமாகஇது அமைய வேண்டும்என்பதுஎன்னுடைய விருப்பம். இந்தக் கல்லூரியில் வேதங்கள், ஆகம சாஸ்திரங்கள், உபநிடதங்கள், பன்னிருதிருமுறைகள், மற்றும் நாலாயிரதிவ்விய பிரபந்தங்கள்ஆகியவற்றைக்கற்பிப்பதற்கான பாடதிட்டங்களையும், பிரிவுகளையும் பற்றி 2-3-1992அன்றுநடைபெற்றகோவில்நிர்வாக வாரியக்கூட்டத்தில்கலந்துரையாடப்பட்டது. இது குறித்துகருத்துக்களையும், ஆலோசனை

களையும் வழங்குமாறு வாரிய உறுப்பினர்களும் சமய சான்றோர்களும் கேட்டுக் கொள்ளப் பட்டு இருக்கிறார்கள்.

இந்தக் கல்லூரியை அமைப்பதற்காகத் தேவையான நிலம் மற்றும் நிதி உதவி அளிக்க சில பெரியவர்களும் முன்வந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன். இந்தக் கல்லூரியை அமைதி சூழ்ந்த இடத்தில் ஆன்மீக உணர்வுக்கு தகுந்த இயற்கை சூழலில் அமைக்க வேண்டும் என்றும், அப்படி தேர்ந்தெடுக்கப்படும் இடம் ஆழ்ந்த தியானத்திற்கும் வழிபாட்டிற்கும் உகந்ததாக இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இதற்கு தேவைப்படும் 40 ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் கல்வி நிறுவனங்களில் தற் போது பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டு முறை இந்தக் கல்லூரியிலும் பின்பற்றப்படும். அதாவது ஆதி திராவிடருக்கு 18 விழுக்காடு இடங்களும், பழங்குடியினருக்கு 1 விழுக்காடு இடங்களும், பிற்படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடு இடங்களும், மிகப் பிற்படுத்தப்பட் டோருக்கு 20 விழுக்காடு இடங்களும் ஒதுக்கப் படும் என்பதை மீண்டும் தெளிவுபடுத்தவிரும்பு கிறேன்.

இந்த வேத ஆகம சாஸ்திரக் கல்லூரியை எதிர்வரும் கல்வி ஆண்டில் தொடங்குவதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன். மேலும், இந்த கல் லூரியில் பல ஆராய்ச்சிப் பிரிவுகளைத் தொடங்கி இதனை ஒரு பல்கலைக் கழகமாக உயர்த்தும் எண்ணமும் எங்கள் அரசின் பரி சீலனையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேவஸ்வம் என்று அழைக்கப்படும் கன்னியா குமரிதேவஸ்வம்வாரியம், 490 கோவில்களைப் பராமரித்து வருகிறது. இதற்காக அரசு ஒவ் வொரு ஆண்டும் மானியமாக ரூ. 17.70 லட்சம் வழங்கி வருகிறது. ஆலயங்களின் பரா மரிப்புச் செலவு மிக அதிமாக உயர்ந்துள்ள தாலும், இவ்வாரியத்திற்கு கடந்த 34 ஆண்டு களாக வழங்கப்பட்டு வரும் இந்த மானியத் தொகை உயர்த்தப்படாததாலும், அவ்வாரி யத்தின் கோவில்கள் பெரிதும் சீரழிந்து சாதா ரண பராமரிப்புப் பணிகள் கூட செய்ய முடி யாத நிலையில் இருந்தன. இதனைப் போக்கு வதற்காக 1992-93-ஆம் ஆண்டு முதல் இதற்கு கூடுதலாக ரூ. 10 லட்சம் வழங்க முடிவு செய் யப்பட்டுள்ளது. முதலமைச்சர் கோவில் புனர மைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 1 கோடி வைப்பு நிதியாக, தமிழ்நாடு போக்கு வரத்து மேம்பாட்டு நிதி நிறுவனத்தில் செலுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டி யிலிருந்து, இந்த கூடுதல் ஒதுக்கீடான ரூ. 10 லட்சம் கொடுக்கப்படும்.

மேலும், முதலமைச்சர் கோவில் புன ரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து முதற்கட்டமாக 19 பாடல் பெற்றகோவில்கள் மற்றும் 16 மங்களாசாசனம் செய்யப்பட்ட கோவில்களின் திருப்பணிக்காக, ரூ. 50 லட்சம் நிதி உதவி அளிக்கப்படும்.

திருவாரூரில் உள்ள சாமி சிலைகள் பாது காப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ள சாமி சிலைகளை முறையாகப் பராமரிக்க, அந்த மையத்தில் குளிர் சாதன வசதி ஏற்படுத்த, ரூ. 9 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத் தில் உள்ள 8,443 கோவில்களில், 66,534 சாமி சிலைகள் உள்ளன. இவை திருடப்பட்டால் அவற்றை எளிதில் கண்டுபிடிக்க உதவியாக சிலைகள் புகைப்படம் பிடிக்கப்பட்டு, தொகுத்து வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு புகைப்படம் எடுக்கப்பட்ட சிலைகள், தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு பழம்பொருள் கலைச் செல்வங்கள் சட்டத்தின் கீழ், பதிவும் செய்யப் படுகின்றன.

இதுவரை 2,563 கோவில்களில் 23,910 சிலைகள் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ளவற்றில், 3883 கோவில்களைச் சேர்ந்த 21,505 சிலைகளுக்குப் புகைப்பட தொகுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த புகைப்படத் தொகுப்புகளை விரைவில் பதிவு செய்யவும் எஞ்சியுள்ள 1,997 கோவில்களைச் சேர்ந்த 21,129 சாமி சிலைகளைப் புகைப் படம் எடுத்து, அவற்றைப் பதிவு செய்யவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது இந்த சாமி சிலைகளுக்கு, வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூஜை செய்யப் பட்டு வருகின்றன. இனிமேல் அங்குள்ள சாமி சிலைகளுக்கு வாரத்தில் மூன்று நாட்கள், அதாவது **திங்கள், செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் பூஜை செய்யப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவில்களில் உள்ள நகைகள் மற்றும் விலை யுயர்ந்த பொருட்கள் குறித்து, சரி யான மதிப்பீடு செய்யவும், பாதுகாப்பாக அவற்றை வைத்திருப்பது குறித்தும், ஆய்ந்து வழிமுறைகளை எடுத்துரைப்பதற்காக, ஓய்வு பெற்ற நீதிபதி என்.கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஆய்வு செய்து சில யோசனைகளை தெரிவித் தது.

அதன் அடிப்படையில், பாதுகாப்பு ஏற் பாடுகள் பற்றிய அறிவுரைகள், அனைத்துக் கோவில் செயல் அலுவலர்களுக்கும் வழங்கப் பட்டன. இது தவிர கோவில்களுக்கு இரும்புக் கதவுகள் பொருத்தவும், திருடர்கள் எச்சரிக் கை மணி பொருத்தவும் ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள தொன்மை வாய்ந்த திருக்கோவில்கள் அனைத்தும் ஆரம்ப காலத் தில் மாமன்னர்கள் குறுநில மன்னர்கள் ஆகி யோரின் நேரடி பராமரிப்பிலிருந்து வந்து, பின்னர் அவர்களால் வழங்கப்பட்ட மானி யங்கள் சொத்துக்கள் ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில் பராமரிக்கப்பட்டு வந்தன.

அருளாளர்களின்

# அருள் அனுபவம்



திருமந்திரச்செம்மல்
டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009.

## என்னை ஆண்டு கொண்டான் (11)



'திருமந்திரச் செம்மல்'
**திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.**

மூன்று மாதங்களுக்குள் இரண்டு பெரிய அறுவை சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டு, பிணியும், வலியும் என்னை வருத்திக்கொண்டிருந்த நேரம், சிந்தனைகள் எல்லாம் உடல் உபாதையைப் பற்றியே. மனதை மாற்றி, எண்ணங்களை இறைவன்பால் வைக்க முயற்சித்தும் இயலவில்லை. உடலின் உபாதை உள்ளத்தை நிரப்பி, வேறொரு பொருளையும் பற்றி சிந்திக்க விடாமல் தடை செய்தது. அன்பர் ஒருவர் என்னைப் பார்க்க வந்தார். திருவாசக பிரதி ஒன்றை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்றார். அது அண்ணாமலை பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட நூல், திரு நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் அந்த நூலின் பதிப்பாசிரியர். பழைய பதிப்பு. பக்கங்கள் கிழிந்திருந்தன. வேறொன்றும் செய்ய இயலாத நேரத்தில் திருவாசகத்தைச் சற்று படித்தாவது எனது துன்பத்தை போக்கிக் கொள்ளலாம் என்கின்ற எண்ணம் முதல் தடவையாக எழுந்தது. பெருத்த இன்னல்களுக்கு ஒருவர் ஆளாக்கப் படும்போது, வேறு வழி தெரியாமல் இறைவனை நினைந்து, தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று வருந்தி வேண்டிக் கொள்வது மனித இயல்பு என்று சொல்லுவதுண்டு. ஆனால், அந்த நிலையில்கூட நான் இல்லாத தருணம் அது. சற்று பிரயாசைப்பட்டு மனதை ஒருவழி படுத்தி, எனது கைக்கு வந்த திருவாசகப் பிரதியின் பதிப்பாசிரியரின் முன்னுரையைப் படிக்கத் தொடங்கினேன்.

முன்னுரையின் ஒரு பகுதியை அப்படியே தருகிறேன். அதைச் சுருக்க விரும்பவில்லை. அதிலுள்ள உணர்வுகள் அத்தகையவை. அதற்கு மேல் சொல்ல விரும்பவில்லை. முன்னுரையின் அந்தப் பகுதி பின்வருமாறு :

''மற்றொரு நிகழ்ச்சி. என் நண்பர் ஒருவரைக் குறித்தது; நண்பர் என்று சொல்லுவதிலும், ஆசிரியர்களுள் ஒருவர் எனக் கூறுவதே பொருத்தமாகும். இவர் எனக்கு இலத்தின் மொழி கற்பித்தவர்; கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தினர்; அழுத்தமான சமயப்பற்றும் நெறியும் உடையர்; வழக்கறிஞர்; நான்காம் வகுப்புக்குமேல் தமிழ்ப் பயிலாதவர்; இலத்தீன் ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் வல்லவர். இப்போது இருந்தால் இவருக்கு வயது எண்பத்து நான்கு இருக்கலாம். நாற்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு நாள், நீதிமன்றத்தில் வழக்கு உரைத்து உடலும் மனமும் அலுத்து மாலையில் வீட்டிற்கு வந்தார். நான் எப்போதும் மாலைக் காலத்தில்தான் அவரிடம் இலத்தீன் படிப்பது வழக்கம். உடைகளை மாற்றிக்கொண்டு வந்து என்முன் நின்றார். ''தம்பி, என் வாழ்க்கை ஆண்டவனைத் தூற்றுவதிலேயே கழிகிறது. என்ன செய்வது, மனம் அமைதியடையவில்லை; இச்சொற்கள்தான் ஆறுதல் 'ɐ broken and a contrite heart O God thou wilt not despise (Psəlms:51-17) என்று சொல்லிக்கொண்டு அருகிலிருந்த நாற்காலியில அமர்ந்தார். பின்னர், அவ்விவிலிய நூல் சொற்றொடரின் அருமையை எல்லாம் எடுத்துக்கூறி இதுபோல் வாசகங்கள் நம்தமிழில் இல்லையே'' என்றார். நான், உடனே அவர் கூறிய விரி

காலப்போக்கில் ஏற்பட்ட சமூக மற்றும் பொருளாதார மாறுதல்களினாலும் நிலச் சீர் திருத்தங்கள் மற்றும் குத்தனைதாரர் பாது காப்புச் சட்டங்கள் ஆகியவற்றாலும் கோவிலுக்குக் கிடைத்து வந்த வருமானம் வெகுவாகக் குறைந்தது.

இதனால் கோவில்களை உரிய முறையில் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டு, தினசரி விளக்கேற்றல், அன்றாட பூஜைகள் செய்தல் அர்ச்சகர் போன்ற சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுத்தல் போன்றவைகளுக்குக்கூட, போதிய நிதி வசதியில்லாத சூழ்நிலை ஏற்பட்டது.

இச்சூழ்நிலையில் கோவில்களில் தினசரி ஒரு கால பூஜையாவது நடத்த வேண்டும் என்கின்ற நோக்கத்துடன், உபரி வருமானம் உள்ள கோவில்களின் வருமானத்திலிருந்து ரூபாய் 5 கோடியை எடுத்து வைப்பு நிதியாக வைத்து ஒரு புதிய திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஒவ்வொரு கோவிலுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 2,500 வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 4,462 கோவில்களுக்கு ரூ. 1 கோடியே 45 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள இத்திட்டத்தினால், நலிவுற்றகோவில்களுக்குத்தற்காலிகநிவாரணம் மட்டுமே கிடைத்து வருகிறது. இதற்கு நிரந்தரமாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, நலிவுற்ற கோவில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு எதிர் வரும் ஆண்டுகளில, தவறாது ஒரு கால பூஜையாவது நடத்த வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது.

இதற்காக கோவில் ஒன்றுக்கு ரூ. 25,000 வைப்பு நிதியாக ஏற்படுத்தினால் அதில் கிடைக்கும் வருவாயிலிருந்து ஒரு கால பூஜையாவது செய்ய முடியும். ஒவ்வொரு கோவிலுக்கும் இந்த வைப்பு நிதியை இந்து சமய அறநிலையத் துறையே வழங்க இயலாது. அந்தந்தப் பகுதிகளில் உள்ள பொது மக்களும் இதற்கு உதவ வேண்டும். அந்தந்தப் பகுதிகளில் உள்ள கோவில்களைப் பராமரிக்க பொது மக்கள் முன்வர வேண்டும். பொது மக்களாக முன் வந்து வைப்பு நிதி மூலதனமாக ரூபாய் 25,000 செலுத்த இயலாத சூழ்நிலையில் அவர்கள் ரூ. 12,500 செலுத்தினால் அரசின் சார்பில் மீதமுள்ள ரூ. 12,500 உதவியாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக, சுமார் 400 கோவில்களுக்கு மூலதன வைப்பு நிதி ஏற்படுத்தலாமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். ஒவ்வொரு கோவிலுக்கும் ரூ. 12,500 நிதி உதவி என்ற அடிப்படையில், 400 கோவில்களுக்கு ரூ. 50 லட்சம் ரூபாயை அரசு வழங்கும். இந்தத் தொகை முதல் அமைச்சர் கோவில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

## எது சுகம்?

*செல்வம் மிகவும் சுகமா?*

***இறைவனின் சன்னிதி மிகவும் சுகமா?***

*எதுசுகம்? என்பதை எனக்கே*

*எடுத்துரை யாயோ மனமே!*

**—தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனையிலிருந்து.**

---

இந்த ஆண்டு அரசின் உதவியால் பயன் பெறும் கோவில்கள் 400 ஆக இருந்தாலும், மக்களின் ஆர்வத்தாலும், ஆதரவாலும் இந்தத் திட்டத்தில் பல ஆயிரக்கணக்கான கோவில்கள் பயன் பெறும் என்று நம்புகிறேன்.

பொது மக்கள் இத்திட்டத்தை வரவேற்று அவரவர் பகுதியிலுள்ள கோவில்களின் மறுமலர்ச்சிக்காக முழு மனதுடன் இத்திட்டத்தில் பங்கேற்று, அவர்கள் சார்பாக ரூ. 25,000 நிதியினைத் திரட்டி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொது மக்களால் ரூ. 25,000 நிதி திரட்ட முடியாத இடங்களில் உள்ள கோவில்களுக்கு மட்டுமே, அரசின் பங்காக ரூ. 12,500 கொடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசு என்பது நிர்வாகத்தை நடத்துகின்ற ஒரு வெற்று இயந்திரம் அல்ல. எங்களைப் பொறுத்த வரையில் ஆறு கோடி தமிழக மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளையும் எதிர்பார்ப்புகளையும் லட்சியங்களையும் கண்டறிந்து அவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்கின்ற ஒரு மக்களாட்சி அமைப்புதான் அரசாங்கம்,. எனவேதான் ஒரு குறிப்பிட்ட சாராரின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் சவால்களைச் சந்தித்து மக்களாட்சிக்கு மாட்சிமை சேர்க்க வேண்டும் என்ற எங்களின் நல் உணர்வுகளின் வெளிப்பாடுதான் எங்கள் அரசின் செயல்பாடு.

திருக்கோவில்களும் அவற்றைச் சார்ந்த அறக்கட்டளை நிறுவனங்களையும் பராமரிப்பதில் சிலர் நினைப்பது போன்று தேவையற்ற நிர்வாகத் தலையீடுகள் இருக்காது. ஆனால் அதே நேரத்தில் இந்த அரசு ஆக்கபூர்வமான விஷயங்களில் தலையிட்டு தனது சீரிய பங்கினைச் செயலாற்ற என்றைக்கும் தயங்காது.

மேற்கண்டவாறு **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்** ஆலயங்களின் மேம்பாடு குறித்து தமிழக அரசு ஆற்றிவரும்-ஆற்றவுள்ள அற்புதப் பணிகளை விவரித்து **"அறநிலையத் துறையின் பொற்காலம் இதுவே"** என யாவும் போற்றிப் புகழுமாறு பொன்னான உரை நிகழ்த்தினார்கள்.

— — — —



# லலிதா சகஸ்ரநாமம்


திருமிகு சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்.
ஆணையாளர், அறநிலையத்துறை.


**[அம்பிகையின் லலிதா நாம மகிமையையும், லலிதா சகஸ்ரநாம பாராயணப் பலனையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டுவது இச்சிறிய — சீரிய கட்டுரை. படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.]**

இராஜராஜேஸ்வரி, லலிதா, அர்த்த நாரீஸ்வராம்பாள், பூர்த்திவித்யா போன்ற அன்னை பராசக்தியின் வடிவங்கள் சாக்தத்தின் மிகச் சிறந்த உபாசன மூர்த்திகளாகக் கருதப் படுகின்றன.

''சத்யமேகம் லலிதாக்யம் வஸ்து

ததத்விதீயம் அகண்டார்த்தம் பரம் ப்ருஹம்''

என்ற பஹ்வ்ருசோபநிஷத் வாக்கியத்தில் 'லலிதா' என்னும் முழு முதற்பொருள் பரப்பரும்மம் என்று வர்ணிக்கப்படுகிறது. அதுபோலவே.

''லட்சயத்வாக் ஸர்வவித்யாநாம்

லிங்கஹீனதயாஸ்திதே,

தாரகத்வாத் பவாம்போதே;

லலிதேதி ப்ரகீர்த்யதே.''

என்ற ஸ்லோகத்திலுள்ளபடி 'ல' என்ற எழுத்தில் எல்லா வித்யைகளுக்கும் லட்சியமாகவும், 'லி' என்ற எழுத்தில் லிங்கங்களுக்கு அப்பாற்பட்டு நிர்குண பிரும்மமாகியும் 'தா' என்ற எழுத்தில் பிறவிக் கடலைத் தாண்டவைப்பதாகவும் ஆக 'லலிதா' என்ற பதம் அமைகிறது.

இந்த பிரபஞ்சமே அவள் அருளால் இயங்குகிறது. 'அணோ; அணீயான், மஹதோ மஹீயான்' என்ற கருத்தின்படி அணுவுக்குள் அணுவாகவும், மஹத்தைவிட மஹத்தாகவும் இருப்பவள் அவளே! அவளை வழிபடுவது எல்லா தெய்வங்களையும் வழிபடுவதாக அமைகிறது!

ஆக ஞானம், பக்தி, பேரின்பம் அடைதல் போன்ற பல நிலைகளை அடைய, வசின்யாதி எட்டு வாக்தேவதைகள் பாற்கடலைக் கடைந்தெடுத்து, ஒன்றாகிய அமுதம்போன்று உலகிற்குத் தந்துள்ளனர். ஸ்ரீமாதா, அதாவது கருணையுடன் கூடிய அன்னை, என்று ஆரம்பித்து 999 நாமாக்களில் இந்த அன்னையை வர்ணித்து விட்டு லலிதாம்பிகா என்ற 1000-ஆவது நாமாவாக முடிவதிலிருந்து, இவையனைத்தும் லலிதா என்பதைத் தெளிவாக ஹயக்ரீவ வடிவிலான விஷ்ணு, அகஸ்தியரிடம் உரைப்பது போல அன்னையின் பெருமை சஹஸ்ரநாமத்தில் வெளிப்படுகிறது.

தீய சக்திகளை அழிப்பதற்கு ஒவ்வொரு தருணத்திலும் ஒவ்வொரு தேவதையை அனுப்பும் பராசக்தி பண்டாசுர வதத்தில் எல்லா சக்திகளையும் திரட்டி சிவசக்தி ஐக்கிய ரூபிணியாய் அசுரர்களை வதம் செய்தல், நமது பிண்டாண்டத்தில் உள்ள மாயாதி மலங்களை நீக்கி லலிதா மஹா திரிபுர சுந்தரியை ஜீவ பீடத்தில் எழுப்பவல்ல அரிய பொக்கிஷமாக லலிதா சஹஸ்திர நாமம் அமைந்துள்ளது. 'நாம பாராயணப்ரீதா' எனும் நாமத்தின்படி ஸ்ரீசக்கரத்தின் மையத்தில் அமைந்துள்ள அந்த திரிகோணத்தின் மத்தியில் பிந்துரூபிணியாக உள்ளதை அடைய நாம் இந்த 1,000 நாமாக்களைப் பாராயணம் செய்தல் வேண்டும். எந்த ஒரு வழிபாட்டு முறையிலும் பொருள் தெரிந்து வழிபட்டால் அதன் பயன் பல மடங்கு ஆகும் என்பது சான்றோர் கருத்து,

''யா போகதாயினீ தேவி ஜீவன்முக்திப்ரதா ந ஸா!

மோட்சதா து ந போகாய, லலிதாது உபயப்ரதா''

என்ற ஸ்லோகத்தின் அடிப்படையில் லலிதா, லலிதா மஹா திரிபுரசுந்தரி, லலிதா காமேஸ்வரி, லலிதா பரமேஸ்வரி போன்ற பெயர்களில் அன்னை பராசக்தியை வழிபடுவதால் போக-மோட்சம் ஆகிய இரண்டும் கிடைக்கும் என்பது திண்ணம். எனவே, இதைப் பாராயணம் செய்யும் அன்பர்கள் அனைத்தும் பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல பராசக்தியை வேண்டுகிறேன்.




# லிங்கபுராணம்

வித்யாவாசஸ்பதி
டாக்டர் இரா. நாகசாமி

[5]

இதற்கு ஏன் லிங்கபுராணம் என்று பெயர் வந்தது? லிங்கம் என்றால் என்ன? எவ்வாறு லிங்க வழிபாடு உலகில் தோன்றியது? என்பவை அனைவரும் எழுப்பும் கேள்விகள் தாம். லிங்கவழிபாட்டைப் பற்றி ஆராய்ச்சி என்ற பெயரால் இக்காலத்தோர் ஏதேதோ எழுதுகின்றனர். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக தமக்குத்தோன்றியவற்றை எல்லாம் கூறுகின்றனர். இவை எல்லாம் இன்றைய வாதங்கள். அக்காலத்தோர் அதாவது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த மக்கள் இலிங்கம் என்றால் என்ன? அவ்வழிபாடு எவ்வாறு தோன்றியது? என்பதைப் பற்றி தங்கள் கருத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அக்காலத்தவர் கூறுவதை விட்டு இக்காலத்தவர் கூறும் அரைகுறை ஆராய்ச்சிக் கருத்துக்களை எவ்வாறு ஏற்றுக் கொள்வது என்பது தான் புரியவில்லை. இதோ லிங்கபுராணமே இக்கேள்வியை எழுப்பி விடை அளிப்பதைப் பாருங்கள்.

''ஈறில்லாத நல் இலிங்கம் மற்று
எவ்வகை தோன்றும்
மாறிலாது உறை இலிங்கி யார்
லிங்கத்தில் வழுத்த
ஆறுதாழ்சடை அண்ணல்
எவ்வகை அமர்ந்தருளும்
கூறல் வேண்டும் என்று உரைத்தனர்
கோதிலா முனிவர்.''

இது தமிழ் இலிங்கபுராணச் செய்யுள். சம்ஸ்கிருதத்திலுமே இதே கேள்விகளும், விடையும் உள்ளன. தேவர்கள் நான்முகனைக் கேட்டார்கள்.

''அபிருச்சன் பகவத் லிங்கம்
கதம் ஆஸித் இதி ஸ்வயம்
இலிங்கே மஹேச்வரே; ருத்ர;
சமப்யர்ச்சய: கதம் இதி,
கிம் இலிங்கம் க; ததாலிங்கி''

[அபிருச்சன் கேட்டார்கள். பகவத்லிங்கம் பரமனைக் குறிப்பது, கதம்— எவ்வாறு; ஆஸித்- இருந்தது. இதி-என்று, ஸ்வயம்-தாம், இலிங்கே-லிங்கத்தில், மகேஸ்வர: ருத்ர :- மகேனாகிய ருத்ரன். கதம்-எவ்வாறு, சமப்யர்ச்ய:-பூசிக்கப்பட வேண்டும்; கிம் லிங்கம்- லிங்கம் என்பது யாது, ததா-அவ்வாறு, லிங்கி - லிங்கத்தை உடையவர், க: யார்?]

இக்கேள்விக்கு தத்துவ ரீதியாகவும், புராண ரீதியாகவும் விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் புராண வரலாற்றில் இதன் பொருள் யாது என்பதைக் காண்போம்.

முன்னொரு கால் ஊழிக் காலத்தின் இறுதியில் மழை ஒழிந்து, வெங்கதிரால் உலகு வரண்டு, நிற்பன. திரிவன, ஆய அனைத்தும் பிரளயத்தில் மூழ்கி உழன்றன. அவ்வமயம் அம் மாக்கடலில் ஆயிரம் மலர்த்தாளும், மலை போன்ற ஆயிரம் தோள்களும், ஆயிரம் பொன் முடிகளும் துலங்கும் அண்ணலாம் திருமால் அரவணையில் அரிதுயில் கொண்டான். அங்கு பிரமன், வந்தனன். உலகையே தோற்றுவிக்கும் தான் வந்ததையும் மதிக்காது துயில் கொள்ளும் திருமாலை, அடித்து எழுப்பினன். நித்திரை அகன்ற நீலமுகில்வண்ணன் எதிரில் நான்முகன் நிற்பதைக் கண்டான். எழிற் புன்னகை மலர்ந்து, ''என்னருமை பிள்ளாய் நான்முகனே வருக'' என்று அழைத்தான். தன்னை 'பிள்ளாய்' என அழைத்ததைக்கண்டு நான்முகன் வெகுண்டான். அது தனக்கு இழுக்கு என எண்ணினான். அவனது அகந்தை கண்ணை மறைத்தது. இவ்வுலகையே தோற்றுவிக்கும் என்னை அஜன் என்றும் விதாதா என்றும் விஸ்வாத்மா என்றும் எல்லோரும் அழைக்கும் என்னை, பிள்ளையே என்று மரியாதை இன்றி அழைக்கிறாயே-நீ யார்? என்றான் நான்முகன். கமலக்கண்ணனும் சிரித்துக் கொண்டே ''என்னை உனக்குத் தெரியவில்லையா? உன்னையே என் உதர கமலத்தில் தோற்றுவித்தவன் யான். பரமாத்மா, புருஷன், விஷ்ணு, ஜெகந்நாதன், நாராயணன் என்றெல்லாம் யாரை அழைக்கிறார்களோ அது நானேயன்றோ. இது உன் குற்றமல்ல. குழந்தாய். ஏன் மாயை வயப்பட்டு நீ இவ்வாறு பிதற்றுகிறாய்,'' என்று கூறவே பிரமனின் கோபம் தலைக்கேறியது. இருவருக்கும் தம்முள் யார் பெரியவர், தலைவர் என்பதில் பயங்கர போர் மூண்டது.

நான்முகனும், திருமாலும் ஒருவரோடொருவர் போரிட்டுக் கொண்டிருக்க, அவர்களுக்கிடையே ஒரு காணற்கரிய ஜோதி தோன்றியது. நூறாயிரம் கோடி சூரியன் தோன்றியதுபோல் பிரகாசித்தது அந்த ஜோதி.

அதன் அடி தெரியவில்லை. முடி தெரியவில்லை. அது ஆயிரம் கோடி ஜோதி மலைகள் போல் பிரகாசித்தது. அதன் ஒளி குன்றவும் இல்லை. அதைக் காட்டிலும் அதிகரிப்பும் இல்லை என்னும் வகை ஒளிப்பிழம்பாக தெரிந்தது. அதற்கு ஆதியும் இல்லை. அந்தமும் இல்லை. அடியும் இல்லை. முடியும் இல்லை. தாங்கரிய தழற் பிழம்பாய் தோன்றிய அம்மாபெரும் ஒளியைக் கண்டு திருமாலும் பிரமனும் தங்கள் சண்டையை நிறுத்தினர். இது என்ன ஒளி என்று வியந்து நோக்கினர். அதைக் கண்டு விஷ்ணு அதிசயித்தார்.

இருவரும் ஒரு முடிவெடுத்தனர். யார் நம்முள் பெரியோன் என்றல்லவா நாம் பூசல் இடுகிறோம். இப்பேரொளியின் தோற்றம் யாது? எங்கு தோன்றி எங்கு மறைகிறது எனக் காண்போம். நான் அடியைத் தேடுகிறேன். நான்முகனே நீ முடியைத் தேடு என திருமால் கூறவே நான்முகன் அன்னப்பறவை உருவில் விண்ணிலே பறந்தனன். திருமாலோ வராக உருவிலே பூமியின் கீழ் பறித்து பாதாளம் பாய்ந்தனன். பல கற்பகோடி காலம் இருவரும் தேடினர். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் இருவரும் தேடியும் ஒருசிறிதளவுகூட அப்பெரும் பிழம்பின் அடியோ முடியோ கண்டாரில்லை. ஏதும் காண முடியாது இருவரும் தாங்கள் தொடங்கிய இடத்துக்கே வந்து நின்றனர். மமதை தம் கண்ணை மறைத்து நின்றதைக் கண்டு வெட்கி தலை குனிந்து நின்றனர். இருவரும் அப்பேரொளியான் முன்னும் பின்னும் பக்கங்களிலும் கரங்கூப்பி சிரம் தாழ்த்தி வணங்கி நின்றனர்.

அப்பேரொளி முன் நின்று அதிசயித்து வணங்கி நிற்கும் அவர்கள், ஒரு பேரொலி கேட்டனர். அப்பிழம்பின் தென்புறம் 'அ' காரத்தையும் வடபுறம் 'உ' காரத்தையும், மத்தியில் 'ம' காரத்தையும் அதன் மேல் நாதாந்தமாக 'ஓம்' காரத்தைத் தெளிந்தனர். அவை அகார, உகார, மகாரமாக மூன்று மாத்திரைகளாகவும் இறுதியில் அரை மாத்திரையாக, முழுமையாக, 'ஓம்' காரமாகக் கேட்டது. அவ்வெழுத்துக்களிலிருந்து தான் இருக்கு, யஜுர், சாமம் ஆகிய வேதங்கள் தோன்றின. அவ்வொலி வாயிலாகத் தான் பரமனைக் காண முடியும். அப்பொழுதுஅங்கு பரம ரிஷி தோன்றினார். அவரிடமிருந்து, அங்கு தோன்றியுள்ளது 'மகேசன்'' எனத் திருமால் அறிந்தார். 'ஓம்' என்ற அந்த 'ஒலி' வாயிலாகத்தான் பரஞ்சோதியாகிய அப்பரமனை அறிய முடிந்தது என அறிந்த திருமால் அவரை துதிக்கத் தொடங்கினார். அவ்வாறு காணொணாத ஒளியாகத் தோன்றிய அப்பிழம்பு-பரமனை வெளிக் காட்டும் குறி. லிங்கம். (லிங்கம் எனில் காரணம்; சுட்டுவது என்று பொருள்). அது வெளிப்பட்டதால் அதை 'லிங்க வெளிப்பாடு' என்றும் லிங்கோத்பவர் என்றும் கூறுவர். அருளே வடிவாக பெரும் ஜோதியாக தோன்றும் சிவபரனே லிங்கம். அதுதான் லிங்கம். வேறு அல்ல; என்று லிங்கபுராணம் தெளிவாகவும், நயமாகவும் கூறுகிறது. தமிழில் இலிங்கபுராணம் செய்த

---

விதுரர் ஒரு கோப்பை கஞ்சி அளித்தார். திரௌபதியோ கொஞ்சம் கீரை மிச்சமாக ஒட்டிக் கொண்டிருந்தது அதைக் கொடுத்தாள். மேற்போக்காகப் பார்த்தால் இவைகளுக்கு மதிப்பே கிடையாது. ஒரு பைசா கூட இவற்றிற்கு விலையாகக் கிடைக்காது. ஆனால் இவற்றிற்கு விலையாக இறைவன் எவ்வளவு தந்தான் என்பதை எண்ணிப் பாருங்கள்! கொடுத்த பொருளின் கடைவிலை என்ன என்று அவன் பார்ப்பதில்லை. அதைக் கொடுக்கத் தூண்டிய மனப்பாங்கைத்தான் அவன் கணக்கில வைக்கிறான். ஆகவே, அவனது அருளைப் பெறவேண்டுமானால், நினைவுகளைத் துப்புரவாக்கி வையுங்கள்.

—ஸ்ரீ சத்திய சாயிபாபா

---

வரகுண ராமர் பக்தி மேலிட தன்னையே மறந்து இங்கு செய்யுட்களைப் படைத்துள்ளது நம் உள்ளங்களை தொடும் வண்ணம் உள்ளது. தமிழ் லிங்கபுராணம் நூறு ஆண்டுகட்கு முன்னர் 1876-இல் அச்சிடப்பட்டது என்று கண்டோம். அதன் மறு பதிப்பு இது வரை வந்ததாகத் தெரியவில்லை. அதன் காகிதங்களும் பழுப்பேறி ஒடிந்து உடைகின்றன. நூலும் கிடைப்பதும் படிப்பதும் அரிது. ஆதலின் அதிலிருந்து சில செய்யுட்களையாவது எளிமையாக புரிந்து கொள்ளும் வகையில் இங்கு கொடுக்க உத்தேசம்.

லிங்கத்தைப் பற்றிக் கூறும் அத்யாயத்தில் மகாலிங்கம் தோன்றிய அத்யாயம் என்று காணப்படுகிறது. அப்பாடல்களை முதலில் காண்போம்.

''கிடைத்தற்கரிய அரும்பொருளே
கேடின்று உயர்ந்த பரஞ்சுடரே
உடைக்கும் பரவைக் கடல் விடம் உண்டு
உலவாது எம்மைப் புரந்தோனே
படைத்தும் அளித்தும் எவ்வுலகும்
பாழ் பட்டொளியாக் கடை நாளில்
துடைத்தும் விளையாட்டயர்கின்ற
தோன்றால்! உன்னைப் போற்றுவமே.''
''கீற்று மதியம் தவழ் குடுமிக் கிளர்
செம்பவள மால் வரையே
ஆற்றும் தவத்தின் துறைபோய
அன்பர் படியும் அருட்கடலே
ஊற்றும் பசுந்தேன் கமழ் கொன்றை
உருவம் பசுந்தார் நறுந்தாது
தூற்றும் தரங்க கங்கைபுனை
தோன்றால்! உன்னைப் போற்றுவமே.''

''அரிய பழ நான்மறைக் கொழுந்தாய்
அமலமாகி அழிவின்றி
எரியும் கனலாய் வெண்மதியாய்
எரிக்கும் கதிர்செய் பருதியானாய்
உருவாய் அருவாய் சின்மயமாய
உள்ளும் புறமும் உணர்வரிய
துரியாதீதமாய் நின்றருளும்
தோன்றால்! உன்னைப் போற்றுவமே''.

இந்த புராணத்துக்கே அடிப்படை இக் கதைதான். இதன் தத்துவமே, சைவதத்துவம். ஆதலினால்தான் இப்புராணம் 'லிங்கபுராணம்' எனப் பெயர் பெற்றது.

அப்பர் பெருமான் பரமனை ''லிங்க புராணத்துள்ளானை'' என்று பாடியுள்ளார் எனக் கண்டோம். இக்கதையை அனேகமாக எல்லாப் பதிகங்களிலும் அப்பரும், சம்பந்தரும் பாடியுள்ளனர். லிங்கபுராணத்தில் குறித்துள்ள கருத்துக்கள் அனைத்தையும் அப்பர்-சம்பந்தர் தேவாரங்களில் காணலாம். அப்பர் பெருமானின் தேவாரத்தில்

'நிரவொளி வெள்ளம் மண்டி நெடுஅண்டம்மூட
நிலநின்று தம்ப மதுவப்
பரமொரு தெய்வ மெய்த இது வொப்பதில்லை
இரு பாலும் நின்று பணிய
பிரமனும் மாலும் மேலை முடியோடு பாதம்
அறியாமை நின்ற பெரியோன்
பரமுதலாய தேவர் சிவனாய மூர்த்தி
அவனா நமக்கோர் சரணே.''

ஊழிக் காலத்தே பெருவெள்ளம் மண்டிய போது அண்டம் முற்றிலும் மூடிய போது இது நிகழ்ந்தது என இப்பாடல் கூறியதைக் காணலாம். அப்போது திருமாலும், நான்முகனும் அகங்காரத்தால் ஒருவரோடு ஒருவர் வாதிட்டு போர் புரியத் தொடங்கவே, எரியுரு தோன்றியது என்பதை

''பெருமைகள் தருக்கி ஓர் பேதுறுகின்ற
பெருங்கடல் வண்ணனும் பிரமனும் ஓரா
அருமையர்'' என்றும் (1-78-10)

''நாற்றமலர் மிசை நான்முகன் நாரணன் வாது
செய்து
தோற்றமுடிய அடியும் முடியும் தொடர்வாயீர்''
(1— 116— 9)

''வணங்கி மலர் மேலயனும் நெடுமாலும்
பிணங்கி அறிகின்றிலர்'' (1-33-9)

என்ற சம்பந்தர் வாக்கும்

''சதுர் முகன் தானும் மாலும் தம்முளே
இகலக் கண்டு
எதிர்முகமின்றி நின்ற எரியுருவதனை
வைத்தார்.''

என்ற அப்பர் பிரான் வாக்கும் இதைக் கூறுகின்றன. அவ்வாறு தோன்றியது அளப்பரியா அழல் பிழம்பு. அது தான் 'லிங்க' உருவம். அதைத் தாணு என்றும், 'தூண்' என்றும் அழைப்பர். அதுவே அனைத்திற்கும் காரணம்-லிங்கம் என்பது லிங்கபுராணம். இதை

''வலம்பட்டு அலர்மலர் மேல் அயன் மாலும்
அழல் தூண்'

''நாணமுடைய .வேதியனும் நாராயணனும்
நண்ணாவொண்ணாத் தாணு''

என்று சம்பந்தப் பெருமானும்—

''நாரணன் பிரமன் அறியாததோர் காரணன்''

என்று அப்பரும் கூறுவதைக் காண்கிறோம். (காரணன்-லிங்கம்) நாரணனும் பிரமனும் அவ்வாறு கண்டார்களே அழல்தூண்-மகாலிங்கம். அது யாதெனில் அதுவே மெய் உருவம்.

''வையந்தான் அளந்தானும் அயனுமாய்
மெய்யைக் காணலுற்றார்க்கு அழலாயினான்''

என அப்பர் கூறுகிறார். அதை இருவரும் 'ஓம்' என்னும் ஒலியால் அறிந்தனர் என்று லிங்க புராணம் கூறுகிறது. அதை அப்பர்:

''ஒன்றவே உணர்திராகில் ஓம் காரத்தொருவ
வனாகும்
வென்ற ஐம்புலன்கள் தம்மை விலக்குதற்கு
உரியீரெல்லாம்
நன்றவன் நாரணனும் நான்முகனும் நாடிக்
காண்குற்ற
அன்றவர்க்கு அரியர் போலும் அதிகை
வீரட்டனாரே''

என்று 'ஓம்' காரத்தை கூறுகிறார்.

அப்பர் பெருமான் ''லிங்க புராணக் குறுந்தொகை'' என ஒரு பதிகம் முழுவதும் இவ்வரிய கதையைப் பாடியுள்ளதையும் காண்கிறோம். அதில் ''இங்குற்றேன் என்று லிங்கத்தே தோன்றினானை'' என்று பாடுகிறார்.

''வளம்பட்டவர் மலர் மேலயன் மாலும் ஒரு
வகையால்
அளம் பட்டறி வொண்ணாவகை அழலாகிய
அண்ணல்
உளம் பட்டெழு தழற் தூணதன் நடுவே ஓர்
உருவம்
விளம்பட்டருள் செய்தானிடம் விரி நீர்
வியலூரே''

என்று சம்பந்தரும்

''நெடியவன் மலரினானும் நேர்ந்து இருபாலும்
நேட
கடியதோர் உருவமாகிக் கனலெரியாகி நின்ற
வடிவின வண்ணமென்றே என்று தாம்
பேசலாகார்
அடியனேன் நெஞ்சினுள்ளாராவடுதுறை
யுளானே''

என்று அப்பர் பெருமானும்பாடுவது இதையே. இந்த மாபெரும் ஜோதியாக லிங்கமாக தோன்றிய கதையை மையமாகக் கொண்டதால் லிங்க புராணமாயிற்று.

திருமேவு பட்டினத்தடிகளொடு நம்பியாண்டார் நம்பி, சேக்கிழாரும் சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருள் செய்த, தெய்விகத் தன்மையோர்''

''மூவர் முதலிகள்'' என்று வழிபடப் பெறும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர்களால் அருளப் பெற்றவை தேவாரம் என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும்; திருநாவுக்கரசருடைய பாடல்கள் தேவாரம் ஆகும். திருஞான சம்பந்தருடையவை திருக்கடைக்காப்பு. சுந்தரர் வாக்கு திருப்பாட்டு. மணிவாசகரின் மணிமொழி திருவாசகம் திருக்கோவையார் என்பது நாமறிந்ததே. பாலையும், சூலையும் ஓலையும் காலையும் (திருவடிப்பேறு) வழியாக்கி இறைவன் நமக்கெல்லாம் திருமுறைச் செல்வத்தை வழங்கியுள்ள இறைத்திறம் நினைந்து போற்றி வழிபடற்குரியது. நால்வர் தமிழை, முறையே சதுரத்தமிழ், தொண்டுதமிழ், உரிமைத்தமிழ், உருக்குதமிழ் என்றழைக்கும் வழக்கும் சிறப்புடையதே. திருமுறைகளை முறையாகப் பாராயணம் செய்து வருவோர் எல்லா நலங்களையும் திண்ணமாய்ப் பெறுவர் என்பதும்; இவற்றை ஓதும் **நா, வாய்**-ஆகிய இரண்டுமே **நாவாயாக** இருந்து பிறவிக்கடலை கடந்து முத்தியென்னும் நகரையடைய உதவும் என்பதும் அருளாளர்களின் முடிவு.

இத்திருமுறைகளோடு ஒக்கும் என்ற ஏடு செய்து வைத்த பெரியபுராணம்-திருத்தொண்டர் புராணம்; பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழாரின் செந்தமிழ்க் காப்பியம் பன்னிரண்டாம் திருமுறையாக இடம் பெற்று, திருமுறைத் தொகுப்பை நிறைவு செய்கின்றது.

திருமுறைகளின் சாரமாகிய சைவசமயம் முப்பொருளுண்மையை நிலைநிறுத்துகின்றது.

**பதி, பசு, பாசம்**

பதி-தலைவன். பதியே சிவபெருமான். அவரே மேலான தலைவர். அவர் எல்லாமாய் இருப்பவர்-எங்கும் இருப்பவர்-முடிவிலா ஆற்றலுடையவர். Omni Potent - Omni Presence - Almighty அவரை நெஞ்சார நினைந்து வழிபட்டு, அவருடைய மலரடிகளில் அடைக்கலப் பெற்று, அருளை வேண்டி, பெற்று அநுபவித்து, பிறவித் தளை நீக்கி, பிறவா நிலை எய்தி, அவருடைய திருவடிக்கீழ் இருந்து பேரானந்தம் பெற்றிருத்தலே நித்தியப்.

''தருவாய் நின்திருவடிக்கீழ் ஓர் தலை மறைவே'' என்பது அப்பர் அருள்வாக்கு. வரம்பில் இன்பம் வழங்கவல்ல, வினையின் நீங்கி விளங்கு முதல்வனாம் சிவபெருமானின் அருளுக்குச் சென்றடைய வேண்டிய உயிர்-ஆன்மா-பசு. இச்சொல் ''பச்'' என்னும் சொல் மூலத்திலிருந்து வந்தது; கட்டப்பட்டது-பிணிக்கப்பட்டதுஎன்னும் பொருளையுடையது. பசு-உயிர்-ஆன்மா; தானே அறியும் ஆற்றலின்றி உணர்த்த உணரும் தன்மையது. இவ்வுயிர் இறைவனை யடைந்து இன்புறுதலே பிறவிப் பயன்.

இப்பயனையடைவதற்குத் தடையாக இருப்பது பாசம். பாசம்- கட்டு: பாசத்தளையால் கட்டுண்ட ஆன்மா, வழிபாட்டாலும் சிவபூசையாலும் அடியார் உறவு, ஆசானின-குருவின் உபதேசத்தாலும், மனப் பக்குவமடைந்து, பாசங்களின்றும் நீங்கிப் பதியை அடைவதே பிறவிப் பயனும் சைவத்தின் முடிவும் ஆகும். இவ்வழிகளை விரித்துச் சொல்வனவே சாத்திரங்கள். மும்மல வயப்பட்ட ஆன்மா, நின்மலனாகிய இறைவனின் அருளாகிய நீரால் தூய்மையாக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுவதே கோதாட்டிக்குணங் கொள்ளும் திறமாகும். இத்திறமே பரம்பொருளின் பெருமிதத்திற்கும் சௌலப்பியமென்னும் ஒளிவந்த திறனுக்கும் ஏற்றமாகின்றது.

**செய்வினையும் செய்வானும்**

எந்த ஒரு செயல்-வினை நிகழ்கின்றது எனின் அதைச் செய்பவன் ஒருவன் இருத்தல் வேண்டும். எந்த ஒரு செயலையும் ஆன்மா-ஒருவன் செய்தாலும், அவன் திட்டமிடுதலும், முடிதலும் எப்படியிருந்தாலும் அச்செயல் திருவருள் வழியில்தான் அமைகிறது. ஏன்! உயிரின் வாழ்க்கைப் பாதையே ஆற்றில் விடப்பட்ட படகு நீரின் போக்கிலேயே செல்லுமது போலத் திருவருள் வழியிலேயே இயங்கவல்லது.

இக்கருத்தைச் சங்கப் புறப்பாட்டு

''யாற்றுநீர் வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப்படூஉம்''-என்று கூறுகிறது.

ஆதலின் எவ்வளவுதான் நாம் முயன்றாலும் அஃது திருவருள் நிச்சயப்பின் முடிவுறும் என்பதை நாம் மறத்தலாகாது. முயல்வது நாம். முடிப்பது திருவருள் என்பதில் அசையா நம்பிக்கை வேண்டும்.

''நம்மாலேயே எல்லாம்'-என்ற எண்ணம் தன்னம்பிக்கை நிலையில் தேவையேயெனினும் அதையே எண்ணி மெய்ம்மறந்து விடலாகாது. நம்மாலேயே அனைத்தும் முடிவதாயின் நாம் செய்யும் அத்தனையும் நம் விருப்பப்படி—நலமாகவே முடிய வேண்டுமே! உலகியலில் மாறாக அமைவதையும் காண்கிறோமே! எனவே நமக்குமேலே ஒருவன் இருந்து, நாலும் தெரிந்தவனாய், அப்பரம்பொருளே நம்மை நடத்துகிறது என்ற மனப்பக்குவம் நமக்கு வரவேண்டும்.

''நானுரைக்கும் வார்த்தையெலாம்
நாயகன்தன் வார்த்தை''
''எனதுரை தனதுரையாக''
'யானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
எனப்பெற்றேன்'-எனவரும் அருட்தொடர்கள் இக்கருத்தையே உறுதிப்படுத்துகின்றன.

''யான் தத்துவக் கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்தெழுதுவதால் என்னைப் புகழ்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் எழுதத் தொடங்கும் பொழுது எனக்குப் பின்னாலிருந்து உணர்த்தி என் கையைப் பிடித்து இன்னொரு கரம் எழுதுவதாகவே அறிகிறேன்.

# விதித்த பொருள் நான்கு

புலவர் பு. மா. ஜெயசெந்தில்நாதன், எம்.ஏ., காஞ்சிபுரம்.

**தோற்றுவாய் :**

உலகில் பெறற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நாம், இனிப் பிறவாத நெறியை அடைதலே பிறவியின் பயனாகும். அந்நெறியை அறிந்து கடைப்பிடித்து, அவ்வீடு பேற்றினை அடைவதற்கு வழிகாட்டி உதவும் துணையே சமயம் ஆகும். ''மற்றீண்டு வாரா நெறி'' க்கு நெறிப்படுத்தும் ஆசான் சமயமேயாம்

சமைத்தல் — பக்குவப்படுத்துதல். மனிதனின் வாழ்வை, உரிய நலங்களையடைவதற்கேற்ப சமைப்பதாதலின் அஃது சமையம்— சமயம் எனப்பட்டது. உலகிலுள்ள பல்வேறு சமயங்களுள் காலத்தாற் பழமையுப் கணக்கிட்டுச் சொல்ல முடியாத தொன்மையும் பெற்றிலங்குவது இந்து சமயமேயாகும். வாழ்வுடன் இயைந்து, கடைப்பிடித்தொழுகக்கூடிய நிலையில் திகழ்கின்ற இப்பெருஞ்சமயத்தின்- இந்து சமயத்தின் இரு கண்களாகத் திகழ்பவை சைவமும் வைணவமும் ஆகும். கண்கள் இரண்டாயினும் பார்வையில் ஒன்றுபட்டு, ஒரு முழுப் பொருளையே தெளிவாகக் காட்டுவது போல இவ்விரண்டும்-சைவமும் வைணவமும் ஒன்றுபட்டு இந்து சமயக் கோட்பாடுகளைத் தெளிவாக்குகின்றன.

**சைவமும் சாரமும்**

சிவத்தொடு சம்பந்தமாவது சைவம். சிவபெருமானை-சிவ பரம்பொருளை முழுமுதல் தெய்வமாகக் கொண்டு வழிபடுவது சைவநெறி

''சைவத்தின் மற் சமயம் வேறிலை—
அதிற் சார் சிவமாம்
தெய்வத்தின்மேல் தெய்வம் இல்''— என்னும் செம்பொருள் வாக்கு சிவத்தின் முதன்மையையும், சைவத்தின் மேன்மையையும் புலப்படுத்துகிறது. திருக்கயிலாய பரம்பரையில் அகச்சந்தானமும், புறச்சந்தானமும் வழி வழி இச்சைவ சமயத்தை வளர்த்துப் பரிமளிக்கச் செய்துள்ளன. மெய்கண்டாரின் சிவஞான போதம் சைவத்திற்கு மணிமுடி போன்றது. அதனுடன் இருந்து அணி செய்வன போன்றவை ஏனைய சாத்திரங்கள். இவ்வணிக்கு அணி செய்வன போன்றவை தோத்திரங்கள்.

''தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே'' என்பது திருமுறை. பதினான்கு சாத்திரங்களும் பன்னிரு திருமுறைகளும் அளவிலாப் பெருமையன, ஆற்றலுடையன.

**திருமுறைகள்**

எங்கும் நிறைந்து, எல்லாமாய் விளங்கி, எல்லா ஆற்றலையும் உள்ளடக்கி தனிப்பெரும் முதலாகத் திகழ்கின்ற சிவபரம்பொருளின் அருள்நலத்தை; வழிபட்டுப் பெற்று அநுபவித்த அருளாளர்கள் தம் அநுபவங்களை-பெற்று நுகர்ந்த அருள் நலங்களை-வடித்துத் தந்தருளிய அமுத வாக்குகளே திருமுறைகள். பன்னிரண்டாகப் பகுப்பு செய்யப்பட்டுள்ள இத்திருமுறைகள், சைவக்கருவூலத் தமிழினிமை சொட்டும் தேன்பாகு, சிவபெருமானே கயிலையில் திருச்செவிமடுத்து ஆனந்தமுற்ற அருட்பெருக்கு, தமிழ்வேதம். திருமுறைகள் அனைத்தும் தெய்வீகமே யெனினும் பதினோராம் திருமுறையுள் சிவபெருமானே அருளிய திருமுகப் பாசுரம் இடம் பெற்றிருப்பது தனித்த பெருமையதாகும். திருமுறைகளின் பெருமையைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

''திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென்மிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான்
செவிமடுத்தசெந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த
எழுதியருள் தெய்வநூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலி வாய்
மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்;''

எல்லா உலகங்களையும் ஒடுக்கி ஊழிக்காலத்தில் - மகாபிரளய சங்கார காலத்தில் தான் ஒருவனேயாக இருக்குங்காலத்து, தனக்குண்டாகும் தனிமையை நலமாய்க் கழிக்கவோ, பெருமானே! உன் கரம் வருந்த திருமுறையை-திருவாசகத்தை எழுதி வைத்துக் கொண்டாய்? என்று வினவும் முறையில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் பாடியுள்ள பாடலால் திருமுறைகளின் அருள்மேன்மை தெளிவாகின்றது. இத்திருமுறைகளை-பன்னிரு திருமுறைகளை 27 அருளாளர்கள் நமக்கு அருளிச் செய்துள்ளனர்.

''திருஞானசம்பந்தர் வாகீசர் சுந்தரர்,
திருவாதவூரர் மற்றைத்
'திருமாளிகைத் தேவர் 'சேந்தனார்'
கருவூரர், தெள்ளுபூந்துருத்தி நம்பி
வருஞான கண்டராதித்தர்'வேணாட்டடிகள்,
வாய்ந்த ''திருவாலியமுதர்
மருவு ''புருடோத்தமர் 'சேதிராயர் மூலர்,
மன்னுதிரு ஆலவாயார்
ஒரு காரைக் காலம்மை ஐயடிகள் சேரமான்,
ஒளிர் 'கீரர்' கல்லாடனார்
ஒண் கபிலர் பரணர் பெய்யுணர்
இளம்பெருமானோடு, ஓங்கு 'அதிரா
அடிகளார்

இதுவே உண்மை. இப்புகழ்மொழிகள் அனைத்தும் தோன்றாத் துணையாக இருந்து எழுதுவிக்கும் அதனுக்கே உரியது'' என்பார் நம் இந்தியத் தத்துவமேதை டாக்டர். சர்வபல்லி இராதாகிருஷ்ணன் அவர்கள்.

'எல்லாம் நின்செயலே என்றிருந்தேன்' என்றுரைத்து, 'என்செயலால் ஆவது ஒன்றில்லை' என்றுணர்த்தும் பாங்கும்;

'அத்தன்மையர் தாம் நமையாள்பவர்'
'எல்லாம் உடைய ஈசனே இறைவன்'—
என வருவனவும் இக்கருத்துக்கே வலிவூட்டுவன.

செயல்-வினை ஒன்றுள்ளது. அவ்வினையை அச்செயலைச் செய்யும் ஆன்மா (கருத்தா) ஒன்றுள்ளது. அக்கருத்தாவால் செய்யப்படும் அவ்வினையால், செய்யப்படும் நிலைக்கேற்பவும்-முறைப்படியும் பயன் ஒன்று விளைகின்றது. அப்பயன், அவ்வினையைச் செய்யும் ஆன்மாவுக்கே (கருத்தாவுக்கே) சென்று சேர வேண்டும். அதுவே உரிமையும் நியாயமும் மறுப்பதற்கில்லை. ஆனால் அக்கருத்தா-தனக்குரிய அப்பயனை தானே எடுத்துக் கொள்ள முடியாது-அவ்வுரிமையும் அதற்கில்லை. அப்பயனை அக்கருத்தாவுக்கு (ஆன்மாவுக்குத்) தருவதற்கு ஒருவர் தேவை. அவரே அப்பயனை அளிக்க வல்லவர்-அளிக்கும் உரிமையும் அவருக்கே உண்டு. தானே கொள்ள உரிமையில்லை. ஆனால் கொடுத்ததை நுகரும் உரிமை மட்டுமே ஆன்மாவுக்கு உண்டு.

நோயாளிக்கு உரியதுதான் மருந்து எனினும் அம்மருந்தைத் தானே எடுத்து உண்ணலாகாது - உண்ணும் உரிமையும் நோயாளிக்கில்லை. மருத்துவன் நச்சயித்த உரிய மருந்தை, உரிய அளவு, அவர் நச்சயித்துத் தந்த காலத்தில் அதை உண்ணும் உரிமை மட்டுமே நோயாளிக்கு உண்டு என்பது போல பதி, தர டசு பெறல்வேண்டும். இக் கருத்தை சைவம் நுட்பமாக உணர்த்துகிறது.

செயலால் விளையும் பயனை அளிக்கும் உரிமையும், பயனின் அளவினை நிச்சயிக்கும் ஆற்றலும், எந்த வகையில், எக்காலத்தில், எம்முறையில், எந்த அளவுக்கு அப்பயனை வழங்குவது என்பதெல்லாம் திருவருளின் நிச்சயிப்புத் தான். அதன்படி வழங்கவல்லவரும் அவரே.

முயற்சி மெய்வருத்தக் கூலிதரும் எனினும் அக்கூலியின் அளவினை நிச்சயித்து நுகரச் செய்பவன் இறைவனே. செயல் முடிந்தாலும் அப்பயனை செய்தவனுக்கு உடனே அருளுவதும், சிலகாலம் பொறுத்துப் பின்பு அருளுவதும், உரிய காலத்தை எதிர்நோக்கிக் காத்திருப்பதும் திருவருளின்-இறைவனின் திட்டப்படியேதான் நிகழ்வுறும்.

இறைவனுடைய நிச்சயிப்பை மீறி ஆன்மாவால் ஏதும் செய்ய இயலாது என்பதைச் சைவம் தெளிவாக உணர்த்துகிறது. நிச்சயித்து முறைகளை வகுத்துப் பயனையளிக்கவல்ல இறைவனைச் சைவம் 'கொடுப்பவன்' என்று சுட்டுகிறது. கொடுப்பவன் சிவபெருமான். அவனேயருள ஆன்மா அதையேற்று நலம் பெறுகிறது. நுகர்வது ஒன்றே ஆன்மாவின் செயல். கொடுப்பவனின் முறைகளை ஆராயும் வேலைகூட ஆன்மாவுக்கு இல்லை.

''ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும்
ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்கவேண்டா''
என்பார் திருஞானசம்பந்தர்.

வினைக்கீடாக உடம்பைப் பெற்று வந்துள்ள ஆன்மா; இறைவன் வழங்குகின்ற அருளார் அமுதத்தை (பயனை) நுகர்வதற்குத் தடையேதும் வாராதபடி இறைவனையே பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். நம்வினைக் கேற்ப தடை வரினும் அத்தடையை அகல விக்கும் ஆற்றலாளனும் அவனே. இக்கருத்தைப் பின்வரும் திருவாசகப் பாடல், சான்று ஒன்றைச் சுட்டி விளக்குகிறது.

''வழங்குகின்றாய்க்கு உன் அருளார்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்என்
விதியின்மையால்
தழங்கருந்தேன் அன்ன தண்ணீர் பருகத் தந்து
உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன்உன்
அடைக்கலமே.''
(திருவாசகம்-அடைக்கலப்பத்து)

இந்த அரிய நுட்பமான கருத்தை சைவ சமயம் ஒன்றே தெளிவாக எடுத்துரைக்கின்றது.

இதைத் தெய்வச் சேக்கிழார் பெருமான் தம் திருத்தொண்டர் புராணத்துள் சாக்கிய நாயனார் வரலாற்றில் பாடல் ஒன்றில அழகுறத் தெரிவிக்கின்றார். அந்த அருளார்ந்த அமுதத் தீம் பாடல் வருமாறு:


''செய்வினையும் செய்வானும் அதன் பயனும்
கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்
எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கு
இல்லையென
உய்வகையால் பொருள்சிவன் என்று அருளாலே
உணர்ந்து அறிந்தார்''

**நிறைவு :**

இக் கருத்தை உணர்ந்து கொள்வோமானால் நம்முடைய கடமை(ஆன்மாவின் செயல்) முயற்சி செய்வது மட்டுமே, செயலை முடிப்பதும் அதன் வழிவிளையும் பயனை அருளுவதும் இறையருளே-சிவபெருமானே என்பது நன்கு புலனாகும். ஏற்பதொன்றே நம் செயல் என்ற தெளிவு பிறக்கும் - மனம் உடன்படும். ஏற்று இன்பம் பெறுவோம்.

முயற்சி நம்முடையது - முடித்து வைப்பது திருவருள் என்ற மனநிலை வாய்த்து, வளர்ந்து தெளிவைத் தந்துவிடுமாயின்
''தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் அருள்வாக்கினை ஏற்றுச் செயற்படும் மன நலம் வளரும் - மகிழ்வும் வாழ்வில் நிலைக்கும்.

**திருவருளும் குருவருளும் துணை**



# தந்தையை மிஞ்சிய தனயன்

தவத்திரு சந்திரசேகரேந்திர

சரசுவதி சுவாமிகள்



இமயமலை மகா பெரியதாக இருக்கலாம்; கடுகு சின்னஞ் சிறியதாக இருக்கலாம். ஆனால் இமயமலைக்குள் இருக்கிற அத்தனை அவயங்கள் கடுகுக்குள்ளும் இருக்கும். கடுகைக்கூட அப்படிப் பிரித்துக் கொண்டே போகலாம். கடைசியில் ஓர் அணு வந்துநிற்கும். அப்புறம் பிரிக்க முடியாது. சர்வ வியாபகமாக, இத்தனை அண்ட சராசரங்களாகப் பிரிந்திருக்கிற சிவசக்திகளைப் பிரிக்க முடியாமல் ஓரிடத்தில் பார்க்க வேண்டும் என்றால், அது அவர்களது அன்பு ஊற்றெடுக்கிற இருதய மத்தியில்தான். பலவாறு அவர்களிடமிருந்து விரிந்திருப்பதெல்லாம் ஒன்றாகக் குவிகிறது இந்த அன்பு என்கிற அணுவில்தான்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''.

என்கிறார் திருமூலர். அன்பு ஒன்றே உள்ள அந்த மனதைத் தெரிந்து கொண்டுவிட்டால், அப்புறம் நம் மனசும் நூறாயிரம் திசைகளில் ஓடாது; அன்பிலேயே முழுகிக் கரைந்து அன்பாகவே ஆகிவிடும். அருணகிரிநாதன் பெற்ற அநுபூதி இதுதான்.

பரமேசுவரன் வஸ்து, அம்பாள் அதன் சக்தி என்கிற சயன்ஸ் சூத்திரமெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். வஸ்துவின் சத்தை (சிவமயமான வெறும் இருப்பு). அதன் மகாசக்தி (அம்பாளின் ஆற்றல்) இதுகளை மட்டும் சொல்லிக் கொண்டு நமக்கு என்ன பிரயோசனம்? நம்மைக் கடைத்தேற்றப் போவது அவர்களுடைய அன்புதான். அருள்தான். இருவருடைய அன்பும்பொங்கிப்பெருகிக் கலந்த இந்த இடந்தான் அவர்களுடைய செல்லப் பிள்ளையான சுப்பிரமண்யர் கடைக்குட்டி யாருக்குமே செல்வம் தானே? 'செல்வ முத்துக் குமரன்' என்றே வைத்தீசுவரன் கோவிலில் அவருக்குப் பெயர். உள்ளே ஒன்றாக இருந்த அன்பு, இரண்டாகப் பிரிந்து மறுபடி ஒன்றாகக் கலந்துஇப்படி நாம்வழிபடுவதற்கு சுலபமாக சுப்பிரமண்யமாக மூர்த்தி கிடைத்திருக்கிறது.

சிவ-சக்தி ஜோதியில் ஜனித்த அவர் மகா தேஜஸ்வி; பரம பராக்கிரமசாலி. எவராலும் சம்ஹரிக்க முடியாத சூரன். தாருகன் முதலான அசுரர்களை வெல்லவே தோன்றிய மகாசக்திமான். சக்திவேல் என்றே சொல்கிறோம். ஆனால், இந்தப் பராக்கிரம சக்தியோடு, அருட்சக்தியாக இருப்பதே அவருடைய விஷேசம்.

அறிவுச் சக்தியாக இருக்கிறவரும் அவர்தான். 'ஞான பண்டிதன்'. ஞானஸ்கந்தன்' என்பார்கள். ஆதிகுருவான தகப்பனாருக்கே உபதேசம் பண்ணினவன். 'ஸ்வாமி' 'தகப்பன் சாமி' எனப்படுகிறார். ஸ்வாமிமலை என்றே அவர் சிவனுக்குப் பிரணவ உபதேசம் செய்கிற சுப்ரம்மணிய ஸ்தலத்துக்குப் பெயர் இருக்கிறது. அங்கே அவரை 'ஸ்வாமிநாதன்' என்பார்கள்.

செல்லப்பிள்ளை! அதனால் தன்னைக் காட்டிலும் இந்தப் பிள்ளையை எல்லா அம்சங்களிலும் பெரியவனாகக் காட்டிப் பூரித்துப் போகிறார் பரமேசுவரன். 'என்னைவிட இவன் ஞானி' என்று பிள்ளையிடமே தழைந்து உபதேசம் வாங்கிக் கொள்கிறார். 'வர பலம் பெற்றுள்ள தாருகன், சூரன் இவர்களை நான்

# கலைச் சிறப்புமிக்க கோயில்கள்

'' கோயிற்கலைச் செல்வர் ''
தி. இராசமாணிக்கம், பி.ஏ. பி.காம்.,

தமிழகக் கோயில்கள் பல சிறப்புகளை உடையன. அவற்றைப் புராணப் பெருமை, சமயச் சிறப்பு, வரலாற்றுப் பெருமை, கலைச் சிறப்பு எனப் பல வகைகளாகக் கூறலாம். அவற்றில் கலைச் சிறப்புப் பெற்ற கோயில்களை மாவட்ட வாரியாக தொகுத்து இங்கு தொட்டுக்காட்டப்படுகிறது.

**செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம்:** கைலாயநாதர் கோயில் காஞ்சிபுரம் பல்லவர்களின் கலைக் கருவூலம், சிவபெருமானின் அரிய திருவுருவங்கள் பலவற்றைக் காணலாம்.

வைகுந்தப் பெருமாள் கோயில் காஞ்சிபுரம் பல்லவர்களின் வரலாற்றை உணர்த்தும் 175 சுதைச் சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

வரதராஜப்பெருமாள் கோயில், காஞ்சிபுரம்: இங்குள்ள கல்யாண மண்டபம் அத்தகைய படைப்புகளில் சிறப்பிடம் வகிக்கிறது.

சுந்தரவரதப்பெருமாள் கோயில், உத்திரமேரூர் :— மூன்று அடுக்கு கருவறையும, அஷ்டாங்க விமானத்தையும் உடைய இந்தக் கோயிலில் 9 மூலவர்கள் உள்ளனர். சென்னையில் உள்ள அஷ்ட லட்சுமி கோயிலுக்கு முன்னோடியாக திகழ்வது.

கடற்கரை கலைக்கோயில் மாமல்லபுரம்: உலகப் புகழ் பெற்ற சிறப்பை உடையது.

சுப்ரமணியசுவாமி கோயில், திருப்போரூர் முருகனின் அரிய வடிவங்கள் பலவற்றைக் கொண்டது.

**வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்:** ஜலகண்டேசுவரர் கோயில் வேலூர் இங்குள்ள கல்யாண மண்டபம் கலைச் சிறப்புமிக்கது.

**தென்னாற்காடு மாவட்டம்:** வீரட்டானேசுவரர் கோயில் திருவதிகை இதன் விமானம் தேர் போன்ற அமைப்பினைக் கொண்டது. சுதை வேலைப்பாடுகள் மிக்கது. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு முன்னோடியாகக் கருதப்படுவது.

கரக்கோயில், மேலக்கடம்பூர்: இருபுறமும் குதிரைகள் விமானத்தை இழுப்பது போன்ற அமைப்பினைக் கொண்டது. ஒரிசா மாநிலத்தில் உள்ள கொனார்க் என்ற இடத்தில் உள்ள உலகப் புகழ் பெற்ற சூரியனார் கோயிலுக்கு முன்னோடியாக கருதப்படுகிறது. வங்க நாட்டைச் சார்ந்த காளை மீது நடனம் புரியும் நடராசர் சிலை கலைத்தன்மை மிக்கது.

திருத்தூங்கானை மாடம், பெண்ணாகடம்: தூங்கானை மாடம் என்ற சிறப்புப் பெயர் பெற்ற இந்தக் கோவிலில் மூலவரை நான்கு புறங்களினின்றும் காணலாம்.

**தஞ்சாவூர் மாவட்டம்:** பெரிய கோயில்: தஞ்சாவூர், கோயில்களின் சக்கரவர்த்தி எனப் புகழப் பெறுவது. பொதுவாக கோபுரம் விமானத்தை விட உயரமாக இருக்கும். இங்கு தான் முதன்முதலில் விமானம் கோபுரத்தைவிட உயரமாக அமைக்கப்பட்டது. நுழை வாயிலை இரு கோபுரங்கள் அணி செய்கின்றன. இங்குள்ள சோழர்கால ஓவியங்களும் பரதநாட்டியத்தின் மேற்படி நடனங்களைப் பற்றிய புடைச்சிற்பங்களும் புகழ் மிக்கவை.

இராஜராஜேசுரம் தாராசுரம்: இங்கு நாயன்மார்களின் சரிதம் சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இராஜகம்பீரமண்டபம் கலை அழகுடன் திகழ்கிறது. ஒரு சிறு இடம் கூட விடாது சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கம்பேசுவரர் கோயில் திருபுவனம்: இங்குள்ள சரபேசுவரர் சந்நிதி முன்னுள்ள கொடிப் பெண்கள் எழிலார்ந்த கலைப் பொக்கிஷங்கள்.

நாகேசுவரர் கோயில் கும்பகோணம்: இதன் கருவறையின் வெளிப்புறச் சுவரில் அமைக்கப்பட்ட பெண்களின் அழகு கலைக் கண்களுக்குப் பெரு விருந்தாக உள்ளது.

**புதுக்கோட்டை மாவட்டம்:** மூவர்கோயில்: இங்கு ஒரே திருச்சுற்றில் மூன்று கோயில்கள் கட்டப்பட்டதில் இரண்டு மட்டுமே இன்று உள்ளன. பல அழகிய சிற்பங்களைக் கொண்டது.

வதைக்க முடியாது; என்னாலும் முடியாததைச் செய்ய-அதாவது எண்ணைவிடப் பெரியவனாக ஒருத்தன் வர வேண்டும்' என்றே இந்தப் பிள்ளையைப் படைத்தார். அப்புறம் ஞான பலமும் அவனுக்கே அதிகம் என்று காட்ட அவனிடமே உபதேசம் பெற்றுக் கொண்டார். 'எங்கேயும் தனக்கு வெற்றியைத் தான் விரும்ப வேண்டும் ஆனால் பிள்ளையிடத்தில் மட்டும் தோல்வியை விரும்ப வேண்டும்' (புத்ராத் இத்தேசபராஜ்யம்) என்பார்கள். அதாவது, ஒவ்வொரு பிதாவுக்கும் தன்னைவிடத் தன்பிள்ளை நன்றாக இருக்க வேண்டும். புத்திசாலியாக இருக்க வேண்டும் என்றுதான் இருக்கும். பரமேசுவரனுக்கே இப்படித்தான் இருந்திருக்கிறது. தானே அம்பாளோடு சேர்ந்து பிள்ளையாக வந்தான் என்றாலும் இப்போது வீரம், ஞானம் லாவண்யம் எல்லாவற்றிலும் முன்னைவிட அதிகமான பிரகாசத்தை எடுத்துக் கொண்டான்.

இங்கே லாவண்யத்தைச் சொன்னேன். ஈசுவரன் மன்மதனைத் தகனம் பண்ணிய பின், மன்மதன் திமிரோடு பிரயோகம் செய்த அதே கரும்புவில்லையும்புஷ்பபாணத்தையும்அம்பாள் எடுத்துக் கொண்டு காமாட்சியானாள். ஈசுவரனைத் திமிரோடு நெருங்காமல் அன்போடு பார்த்து அவரிடம் அடங்கி இவற்றைப் பாதத்தில் அர்ப்பணம் செய்தாள். சண்டை போட்ட மன்மதனால் உண்டாக்க முடியாத அன்பு, இப்போது பார்த்தால் இவனே ஈசுவரன், பொசுக்கின மன்மதனுக்கு மன்மதனாக இருக்கிறான். தமிழில் 'காமவேள்' 'செவ்வேள்' என்று மன்மதன், முருகன் இருவருக்கு மட்டுமே 'வேள்' என்கிற பதத்தைப் பொருத்துகிறார்கள். அது அவனுடைய லாவண்யப் பெருமை.

'முருகன்' 'முருகன்' என்பது தமிழ்நாட்டில் வழங்குகிற வெகு சிறப்பானப் பெயர். 'முருகன்' என்றால் 'அழகானவன்' என்றும் இளமை நலம் மாறாத சௌந்தர்யம் வாய்ந்தவன்' என்பதே அர்த்தம்.

அழகு என்றால் அதுவெறும் சர்ம அழகா? அருளின் அழகுதான இப்படி தேக சாந்தியாக வந்திருக்கிறது. பரமேசுவரன் அம்பாள் சம்பந்தத்தோடு இப்படி குமாரனாக ஆவிர்பவித்தபோது வீரம், ஞானம், சௌந்தர்யம் இவற்றோடு அருளிலும் அதிகப் பிரகாசத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

சத்-சித்-ஆனந்தம் என்று சொல்வார்கள். அதுதான் பரம்பொருள். சத்(இருப்பு) பரமேசுவரன்; இருக்கிறோம் என்பதை உணர்ந்து சக்தியைக் காட்டுகிற 'சித்' அம்டாள் இப்படி உணர்ந்ததில் பேரானந்தம் பிறக்கிறது. இந்த ஆனந்தமே சுப்ரமண்யர். சிவம் என்கிற மங்களமும், அம்பாள் என்கிற காருண்யமும்கலந்த பரம உதவிருஷ்ட மான ஸ்தானம் அவர். சச்சிதானந்தத்தையே 'சோமாஸ்கந்தர்' என்று தமிழ் நாட்டுச் சிவாலயங்களில் எல்லாம் வைத்து உற்சவம் நடத்துகிறோம். ஈசுவரனுக்கும் அம்பாளுக்கும் நடுவே, இருவருக்கும் பொதுவான மத்ய ஸ்தானமாக, சுப்பிரமணியர் குழந்தை ரூபத்தில் இருப்பார். உமையோடும் ஸ்கந்தனோடும் கூடியவர். உமா ஸ்கந்தர் தான் சோமஸ்கந்தரான பரமேசுவரன். 'பிள்ளையார்' என்று விக்நேசுவரரையே சொல்கிற தமிழ்நாட்டில் மட்டும் 'குமரன்' என்று சிறப்பிக்கப்படுகிற இளைய பிள்ளையை மட்டும் தாய் தந்தையரோடு வைத்து மூன்று மூர்த்தியாகச் செய்திருக்கிறார்கள். 'பிள்ளை என்றால் இவன்தான்' என்று எல்லோரும் பெருமைப்படுகிற மாதிரி. பிதாவே பெருமைப்பட்டு தோல்வியை ஒப்புக் கொள்கிற மாதிரி இப்படி உத்தம அமசங்கள் எல்லாவற்றிலும் உச்சமாக இருக்கிறார் சுப்ரமண்ய ஸ்வாமி.

—நன்றி : தவத்திரு சுவாமிகளின்
''தெய்வத்தின் குரல்''
முதற் பகுதி.



## முன்னைய நல்வினையை அழிப்பவை

1. தலநிந்தை
2. தீர்த்த நிந்தை
3. துறந்தோன் நிந்தை
4. புராண நிந்தை
5. வேதம், பசு இவற்றின் நிந்தை

—ஆதாரம்: ஸ்ரீவாஞ்சியம் தலபுராணம்

விஜயாலய் சோழீச்சரம் நார்த்தாமலை: பல்லவர் பாணியும் சோழர் பாணியும் கலந்த கோயில்.

ஆத்மநாதர் கோயில், ஆவுடையார் கோயில். இங்குள்ள கொடுங்கைகள் அதி அற்புத வேலைப்பாடுகள் கொண்டவை.

அறவன்கோயில், சித்தன்னவாசல்; இங்குள்ள ஓவியங்கள் சிறப்புமிக்கவை. 'தமிழக அஜந்தா' எனப் புகழப் பெறுவது.

**திருச்சி மாவட்டம்:** கங்கைகொண்ட சோழபுரம் தஞ்சைப் பெரியகோயில் ஆணின் மிடுக்குடன் காணப்பட்டால், இது பெண்மையின் நளினத்துடன் மிளிர்கிறது. இங்குள்ள சண்டிக்கு அருளும் பெருமான் வடிவம் சிற்ட உலகில் தனி இடம் பெற்றது. இங்கு ஒரே கல்லில் அமைக்கப்பட்ட நவக்கிரகம், 18 கைகள் கொண்ட துர்க்கை, கலிங்க நாட்டுப் பிள்ளையார் ஆகியோர் உள்ளனர்.

அகத்தீசுவரம், சோழீச்சரம், பழுவூர் : ஒரு திருச்சுற்றில் இரு கோயில்கள் உள்ளன. பல சிறப்புமிக்க சிற்பங்களைத் தன்னகத்தே உடையது.

குரங்கநாதர் கோயில், சீனிவாசநல்லூர்: இங்குள்ள கருவறையின் வெளிப்புறச் சுவரில் ஒன்றின்மேல் ஒன்றாக இரு அடுக்குகள் அமைந்தது போன்று உள்ளது இதன் தனிச் சிறப்பாகும். இங்குள்ள பெண்களின் சிற்பங்களும் கலை நலம் மிக்கவையாம்.


**சேலம் மாவட்டம் :** கைலாயநாதர் கோயில் தாரமங்கலம்; இங்குள்ள தூண்களின் சிற்ப வேலைப்பாடுகள், மேல் விதானத்தில் உள்ள தாமரைப் பூவின் கலை அழகு புகழ் மிக்கவை.

**பெரியார் மாவட்டம் :** மகிமாலீசுவரர் கோயில் ஈரோடு : 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தக் கோயில் முழுக்க முழுக்க செங்கற்களால் கட்டப் பெற்றது. இன்றும் நல்ல நிலையில் உள்ளது.

சுப்பிரமணியசுவாமி கோயில், சென்னிமலை ''ஸ்ரீதத்வநிதி'' என்ற நூலில் விதிக்கப்பட்ட முருகனது அரிய வடிவங்கள் நான்கை உடையது.

**கோவை மாவட்டம்:** குமார சுப்பிரமணியர் கோயில், ஓதிமலை :— 5 தலைகள் 8 கைகள் கொண்ட எழிலார்ந்த வடிவம் உடைய முருகனை மூலவராகக் கொண்டது.

நாகேசுவரர் கோயில் முட்டம் : 16 துளைகள் கொண்ட மேகலாபரணம் அமைந்துள்ள அன்னையின் வடிவழகு கண்ணையும் கருத்தையும் கவருவதாக உள்ளது.



**இராமநாதபுர மாவட்டம்:** இராமநாத சுவாமி கோயில, இராமநாதபுரம் இதன் திருச்சுற்று உலகப்புகழ் பெற்றது.


**திருநெல்வேலி மாவட்டம் :** வாலீசுவரர் கோயில், திருவாலீசுவரம் : சிறப்பு மிக்க சிற்பங்கள் பலவற்றைக் கொண்டது.

வெட்டுவான் கோயில், கழுகுமலை: பாண்டியர்களின் அதிஅற்புத மலைத் தளி. மலையின் ஒரு பகுதியே கோயிலாக அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மிருதங்க தட்சிணாமூர்த்தி வடிவம் இந்திய நாட்டில் வேறு எங்கும் இல்லை. ''தென்னக எல்லோரா'' என்ற புகழ் படைத்தது.

கரிவரதப்பெருமாள் கோயில் : கிருஷ்ணாபுரம். நாயக்கர்களின் சிற்பத் திண்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

**மதுரை மாவட்டம்:** மீனாட்சி அம்பன் கோயில் மதுரை. பாண்டியர்கள் மற்றும் நாயக்கர்கள் காலத்தில் தமிழகம் சிற்பக்கலையில் அடைந்திருந்த உன்னத நிலைக்குச் சான்றாக அமைந்துள்ளது.

# பாம்பன் சுவாமிகள் பாடிய திருப்போரூர் திருமுருகன்



**பேராசிரியர் டாக்டர் ப. இராமன்**

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்த ஞானபானு பாம்பன் அருள்மிகு குமரகுருதாச சுவாமிகள் பாடியருளிய பாடல்கள் 6666 ஆகும். ஆறுமுகப் பெருமான் எழுந்தருளிய தலங்கள் பலவற்றையும் பாடிப் பரவியுள்ளார் சுவாமிகள். தலங்கள் பற்றிப் பாடிய பாடல்களுள் திருப்போரூர் பற்றி இரண்டு பதிகங்கள் உள்ளன. ஒரு பாடல் திருவலங்கற்றிரட்டு முதற் காண்டத்தில் 'திருப்போரூர்' என்ற பெயரில் உள்ளது. இன்னொன்று ஸ்ரீமத் குமார சுவாமியத்தில் 'யுத்த புரி' என்ற பெயரில் உள்ளது. இவ்விரு பதிகங்களிலும் சுவாமிகளின் கருத்து விளக்கமும் கற்பனை வளமும் அமைந்துள்ளன. அருள்மிகு சிதம்பர சுவாமிகளின் திருப்போரூர் சந்நிதி முறையில் உள்ள பாடல்களின் வருணனை முதலியவற்றையோ கருத்துகளையோ சுவாமிகள் பயன்படுத்தவில்லை. சுவாமிகளின் பாடல்கள் தனித்தன்மை வாய்ந்தவை. திருப்போரூர் என்னும் பதிகத்தைச் சீகாமரம் என்னும் பண்ணில் பாடியுள்ளார். யுத்தபுரி என்ற பதிகத்தை அடி ஒன்றற்குப் பத்தொன்பது எழுத்துக்கள் வருமாறும் இரண்டாம் எழுத்து ஒன்றிய சிறப்புடை அடியெதுகை அமையுமாறும் பாடியுள்ளார். சுவாமிகளின் பதிகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சிறப்பிருத்தலைக் காணலாம்.

இனித் திருப்போரூர் என்னும் பதிகப் பொருளைக் காணலாம்: சிறந்த தமிழ்ப் புலவர்கள் பெறுதற்கரிய கல்விச் செல்வமும் கேள்விச் செல்வமும் பெற்றிருந்தனர். இவற்றைப் பெற்றதன் பயனாக ஆசை என்னும் வலிமையை மோதினர். முருகன் திருவடிகளை புகழ்ந்து பாடினர். இவர்களுக்குத் தலைவன் முருகப்பெருமான். சொலலழகு நீங்காத நான்கு வேதங்களும் தூய ஒளி என்று ஓதுகின்ற பெரிய கதியை அளித்து ஆளுதற்குத் தன் உள்ளத்தில் நடமாட வருவாயாக எனத் திருப்போரூர் அம்மானிடம் சுவாமிகள் வேண்டுகின்றார். மும்மூர்த்திகளும் சூழ்ந்து நின்று வணங்கும் முதற்பொருள் சிவபெருமான். இப்பெருமானே மூலப்பொருளான பிரணவ சொரூபனான முருகன் ஆவர். நாவன்மைமிக்க புலவர்கள் இவ்வாறு புகழ்ந்துபாடுவர். இப்போரூர் முருகப்பெருமானின் பாசிலாத திருவடிகளை அடியார்கள் அல்லாமல் வேறு யார் அறிவர்? ''சோலை வேலவனே! தேவர் தலைவனே! திருப்போரூர் அம்மானே! ஞானத்தை அருள்வாயாக'' எனச் சுவாமிகள் வேண்டுகின்றார்.

போரூர் முருகன் இமயமலைக்குரிய உமையாளின் அன்பு மற்றும் அறவோர் சிகாமணியும் ஆவன். நாட்டிலுள்ள மூடர்களும் மேகம்போல் கவிமழை பொழியுமாறு அவர்தம் நாவில்மந்திர எழுத்தை எழுதியருள்பவன். இதனை,

''நாட்டு மூடரு மாரி போலிசை
பாட வேலவர் நாவி லேவரி
தீட்டு நாயகனே''.

எனச் சுவாமிகள் இசைக்கின்றார் திருப்போரூர் அம்மானிடம், பாட்டின் மூலம் அவனைப் புகழும் தன் வறுமையை நீக்கவேண்டுகின்றார்.

பீடத்திலிருக்கும் பெருந்தவசிகளின் ஈசனும் குபேரேசனும், உயிர்கள் தன் திருவடிகளை அடையுமாறு திருப்புகின்ற தலைவனும் ஆவன் இம்முருகன். பிறவியில் மீண்டும் புகாதவாறு அவன் திருவடிகளையே நினைந்துருகும் ஏழையாகிய தன்னைத் தன் விருப்பம் நிறைவேறுமாறு மணம் பொருந்திய திருவடிகளில் சேர்க்குமாறு வேண்டுகின்றார். இப்பெருமான் காலாதீதன். ஆகையால் ஆண்டு, திங்கள், வாரம், நேரம் ஆகியவை ஒன்றுமில்லாத பூரணப் பொருள். மலக்குற்றம் இல்லாத உயிர்கள் தன்னிடம் இரண்டறக் கலக்க அருள்பவன். இத்தகைய கருணைக் கடலிடம் ஏழையாகிய தன் பிறவித் துன்பத்தை நீக்கியருள அவன் திருவடிகளைத் தந்தருள வேண்டுகின்றார். அழகு விளங்கும் அம்மயிலேறும் ஈசனும் வனவேடர் தம் மகளான வள்ளி அம்மையாரின் அணிகலன்கள் அணிந்த தோள்களைத் தீண்டுபவனுமான திருப்போரூர் அம்மானிடம் மீண்டும் திருவடிகளையே தருமாறு வேண்டுகின்றார்.

அவ்வாறு வேண்டி நிற்கும் ஏழையான தன் உள்ளத்தையும் அவ்வீசன் அறிவான் என்கின்றார்.

முருகப்பெருமான் ஓர் இரவில் வனசரர் வாழும் சிறுகுடிக்குச் சென்றார். நம்பிராசனும் வனசரரும் அறியாவண்ணம் வள்ளியம்மையை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டார். வேடராசன் மகளை அவனுடைய ஒப்புதலின்றிக் கொண்டு சென்றவர் ''பெண் திருடி'' அல்லவா! அதனால்தான் வள்ளியைத் திருடிச் சென்ற தலைவனே! என்கிறார் சுவாமிகள். முரட்டுக் குணமுடைய வேடர்கள் தீங்கு செய்யச்சிறிதும் தயங்கமாட்டார்கள். அவர்களிடத்திற்குச் செல்வதே தீமையாக முடியும். அங்கு நள்ளிரவில் செல்வது இன்னும் பெருந்தீங்காய்முடியும். அவர்கள் வேட்டுவத் தொழிலன்றி வேறொன்றையும் கல்லாதவர். ஆதலால் சிறிது ஐயம் ஏற்படினும் ஆளைக் கொன்று விடுவர். இத்தகைய அச்சங்கங்களையெல்லாம் பொருட்படுத்தாமல் சென்று அவர்தம் பெண்ணையே திருடிச் சென்றவர் பெருந்திருடர் அல்லவா!

ஒரு சமயம் சுவாமிகள் முருகனைத் திருடனாக ஒரு பாடல் பாடித் தனது தலை அணைக்குக் கீழே வைத்துப்படுத்துக் கொண்டார். அப்போது அவர் முதுகில் 'மெத்' என்று ஓர் அடி விழுந்தது. உடனே, இவர் முருகா, இப்பாடலை நீ ஏற்கவில்லையா? என வினவினார். மறுமொழி ஏதும் கிடைக்கவில்லை. அதனால் ஏற்றுக் கொண்டதாகவே எண்ணினார்.

அப் பாடல் வருமாறு:

''கோத்தயிர்வெண் ணெய்த்திருடன்
கோலபரு காநறிய
பூத்திருடன் தன்மதலாய் பொங்குகுறக்—
கோத்திரத்தோர்
பெண்திருடிச் சென்ற பெருந்திருடா
என்போதம்
உண்டுதிரு டத்தெரியா யோ''

சுவாமிகள் கானவேடர் மகளான வள்ளியை மூலப்பொருள் எனக் குறிப்பிடுகின்றார். இறைவனின் பிரிவரீய கிரியாசத்தியாக விளங்குவதால் மூலப்பொருளான முருகப்பெருமான் வேறு, வள்ளியம்மை வேறு எனப்பிரித்து கூறவியலாதன்றோ? இங்ஙனம் குறிப்பிடும் சுவாமிகள், தன் ஆன்மாவானது அவனுக்கு உரிமை பூண்டிருக்க நினைக்கும் என்கின்றார். அவ்வாறே தன் நாவும் கூற இனிக்கும் அறிவுடையவன் என்கின்றார். தன் உள்ளத்தில் உள்ள அறியாமை நீங்க அருள்கூறுமாறு இளங்கோவைத் துதிக்கின்றார்.

முருகப்பெருமானிடம் உள்ள வேற்படையைப் ''படைக்கல நாயகம்'' என்பர். அதாவது எல்லாப் படைகளுக்கும் தலைமையானது. உடம்பிடி என்றும் ஞானசத்தி என்றும் பெயர்கள் உண்டு. ஞானசத்தி என்றும் அழியாது. ஆதலால் வேற்படையை இரு துண்டாக ஆக்க முடியாது. இதனையே ''நறுக்கொணா உரனால் அறா அயில்'' எனக் குறிப்பிடுகின்றார். அழியாத இப்படைக்கல நாயகத்தை ஏந்திய தலைவரிடம், ''காத்தருள்வாயாக'' எனத் துதிப்பவர் வினைகளை அழித்துக் காத்தருள்பவர். அவர் அருள் வடிவானர். அவ்வருள் ஒரு கால் குறுகுதலும் ஒருகால் நீளுதலும் இல்லை. என்றும் ஒரு படித்தாய் உள்ளது. அவ்வருளைக் கொள்ளுதலே முத்திக்கு வழியாகும் எனத் தெளிந்து இறுக்கனாகிய தன்னை கைவிடாது அருளை வழங்கித் திருவடியில் சேர்க்குமாறு பரவுகின்றார். இளங்கோவான போரூர் முருகன் அவர் வேண்டலைக் கேளாதிருப்பாரோ?


## சோதித்தது போதும்

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணி எண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும்
பராபரமே.

—தாயுமானவ சுவாமிகள்

சிதம்பர சுவாமிகள் திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளியுள்ள வேதகிரீசுவரர் பற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார். ''வேதகிரிப்பவரோக வயித்திய வேணிமுடிக்கனியே'' என ஒவ்வொரு பாடலின் இறுதியடியும் அமைந்துளது. இப்பதிகம் முழுவதும் ஈசரின் பெருமை விரித்துரைக்கப்படுகின்றது. முருகப்பெருமானை ஒரு பாடலிலும் குறிப்பிடவில்லை. சுவாமிகள் குகன் ஒருவனையே வழிபடும் கொள்கையுடையவராகையால் இத்திருப்போரூர்ப் பதிகத்தில் ''வேதகிரி அரனார் திருச்சேயே'' எனக் குறிப்பிடுகின்றார். திருக்கழுக்குன்றத்தில் தாழைமரங்கள் செறிந்து வளர்ந்திருந்தன. பாக்குமரங்கள் உயர்ந்து வளர்ந்திருந்தன. நீருள் திரிகின்ற வாளைமீன்கள் தாழைகளில் பாய்ந்தன. அதனால் தாழைப் போதுகள் மலர்ந்தன. இத்தகைய வளம் நிறைந்தது வேதகிரி. வேதகிரீசுரர் சேய் தன்னைப் புகழ்ந்து பாடுவோரின் துயர் தீர்ப்பவன். உலகத்துள்ளே அலைந்துகொண்டிருக்கும் ஏழையான தன்னுடைய வினைகெட அருளுமாறு சுவாமிகள் வேண்டுகின்றார்.

சுவாமிகள் இப்பதிகத்தின் இறுதிப் பாடலில் சிதம்பரசுவாமிகளையும் அருணகிரிநாதரையும் குறிப்பிடுகின்றார். தான் பாடும் ஒவ்வொரு பதிகத்தின் முடிவிலும் அருணகிரிநாதர் பெயரை வைத்தே முடிக்கும் கொள்கையுடையவர் சுவாமிகள். ஆதலால் இங்கும் அவ்வாறே, ''அயனும் அரியும் தேடிக் காண முடியாத பெரிய மலையின் பெயரான்'' என்று குறிப்பிடுகின்றார். சிதம்பரசுவாமிகளைப் பற்றிக் கூறும் பொழுது, அழகிய சிறந்த கவிகளைப் பொழிந்த சிதம்பரம் எனும் பெயருடையன்.



# நடுநாட்டுத் திருப்பதிகள் (2)

"நித்திலக்கோ"

1. திருவயிந்திரபுரம்

தெய்வ நாயகப் பெருமாள்-வைகுண்ட நாயகி
-தேவநாதன்:
வையம் ஏழும் உண்(டு) ஆல்இலை

வைகிய மாயவன், அடியவர்க்கு
மெய்ய னாகிய தெய்வநா யகனிடம்
மெய்தரு வரைச் சாரல்
மொய்கொள் மாதவி, சண்பகம்
மூயங்கிய முலலையங் கொடியாட,
செய்ய தாமரைச் செழும்பணை
திகழ்தரு திருவயிந் திரபுரமே

—பெரிய திருமொழி.

(மெய்யன்-தாசசத்யன்; பணை-வயல்).

சென்னை-திருச்சி மெயின் லைன்இருப்புப் பாதையில், கட லூரை அடுத்துள்ள திருப்பாதிரி புலியூர் இரயில் நிலையத்துக்கு மேற்கே 5 கி. மீ. தொலைவு; டவுன் பஸ் வசதிகள் உண்டு கெடில (கருட) நதிக்கு அருகே ஒரு மலைத் தொடரின் கீழ் இப்பெரிய கோயிலிருக்கிறது.

கோவிலுக்கு அருகில், ஔடதகிரி என்ற குன்றின்மேல் அயக்கிரீவர் சந்நிதி உள்ளது. வடகலை வைணவ ஆசாரியரான வேதாந்த தேசிகர் இங்கே தவம் செய்து கருடன் அயக் கிரீவர் அருளைப் பெற்று 40 ஆண்டுக்காலம் இவ்வூரில் வசித்திருந்தார்.

திருமங்கையாழ்வார் ஒரு திரு மொழி யால் (10 பாசுரங்கள்) இத்திருப்பதியை மங்களாசாசனம் செய்துள்ளார்.

### திருமாலின் ஐந்து நிலைகள்

பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சாவ தாரம் எனும் ஐந்து நிலைகளில் திருமால் திருவருள் புரிகின்றார்.

வைகுந்தத்தில் திருமகளோடு வீற்றிருந்து பரமமுக்தர்களுக்கு அருள் புரியும்நிலை பரம் (மேலான வடிவம்) என்பதாகும்.

திருப்பாற் கடலில் தேவர்கள் பலரும் வழிபட அருளும் திருக்கோலம் வியூகம் (வெளி பட்டவடிவம்) ஆகும்.

தீயோரை அழித்து தூயோரைக் காக்க மச்சம் முதலான அவதாரம் கொண்டு வந்த கோலம் விபவம் (தோன்றி வந்த வடிவம்) ஆகும்.

இயங்குதிணை, நிலைத்திணைப் பொருள் களில் எல்லாம் ஊடுருவிப் பரந்து நிற்கும் சொரூபம் அந்தர்யாமி சொரூபம் (உள்ளுறை வடிவம்) ஆகும்.

திருக்கோவில்களிலும் வீடுகளிலும் தொழப் படும் திருமாலின் திருவுருவம் அர்ச்சாவதார சொரூபம் (வழிபடற்குரிய வடிவம்) ஆகும்.

2. திருக்கோவலூர்

திரிவிக்கிரமன், கோவலன்-பூங்கோவில்
நாச்சியார், ஆயனார்.

"நீயும் திருமகளும் நின்றாயால்,
குன்றெடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா!-வாயில்
கடைகழியா வுள்புகா காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றியினி".

—இயற்பா-முதல் திருவந்தாதி
பொய்கையாழ்வார்.

விழுப்புரம்-காட்பாடி இரயில் பாதை யிலுள்ள திருக்கோவலூர் இரயில் நிலையத்தி லிருந்து, தென்மேற்கே கோவில் 43 கி.மீ. தொலைவில் உள்ளது. கடலூரிலிருந்தும் பேருந்தில் போகலாம். பெண்ணையாற்றின் தென்கரையில் கோயில் இருக்கிறது.

வாமன, திரிவிக்கிரம அவதாரத் தலம். மாபலிச் சக்கரவர்த்தியிடம் மூவடி மண் வேண்டி, உலகத்தை அளக்கத் திருவடியைத் தூக்கிய திருக்கோலம். மூர்த்தியின் உருவம் மிகப் பெரியது. இத்தலத்தில்தான் முதலாழ் வார் மூவரும், ஓரிரவில் இடைகழியில் சந் தித்துப் பெருமாளையும் பிராட்டியையும் நேரில் இருட்டில் நெருக்கியபடி சேவித்து, மூன்று திருவந்தாதிகளைப் பாடினர்.

இந்த ஊர் பஞ்ச கிருஷ்ணாரணிய சேத்திரங்களில் ஒன்று.

திருமங்கையாழ்வார் 18. பொய்கையார் 2. பூதத்தாழ்வார் 1, ஆக 21 பாசுரங்களைப் பொழிந்துள்ளனர்.

உள்ளத்தில் எழுந்தருளிய கடவுளே!'' என்கின்றார். அதாவது,

''தென்மாகவி, பெய்த ஞானவெளிப் பெயரான் உளத்தேவே'' எனப்பாடுகின்றார். ஞானம் - அறிவு அதாவது சித்து. வெளி— ஆகாயம் அதாவது அம்பரம். ஞானவெளியாவது சிதம்பரம். சிதம்பர சுவாமிகளை 'ஞான வெளிப் பெயரான்' எனக் குறிப்பிடுகின்றார்.

சுவாமிகள் திருப்போரூர் அம்மானிடம், ''பொய் தவா வினையேனை பேனிலை போகவே அருள்கூர்' எனத் தனக்கு முத்தியளித்தருள மன்றாடுகின்றார்.

இப்பதிகத்துள் சுவாமிகள், தன் வினை, வறுமை, அறியாமை, உலகப்பற்று முதலியவற்றை நீக்கும்படியும் ஆருளும், ஞானமும் முத்தியும் அருளும்படியும் திருப்போரூர் அம்மானிடம் வேண்டுகின்றார். அம்மான் என்ற சொல்லுக்கு அப்பன் என்று பொருள். தன் தந்தையிடம் தனக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெறுவது தந்தை சேய் எனும் உறவினால் வந்த உரிமையாகும். அத்தகு உரிமையோடு வேண்டுவதால் ''அம்மான்'' என்று அழைக்கின்றார்.

''அம்மானை அருந்தவம் ஆகிநின்ற
அமரர் பெருமான் பதியான''—
(திருசேத்திரக் கோவை-11.)

''அம்மான் சேர் கழுமலம்''—(திருக்கோமூத்திரி-12) எனத் திருஞானசம்பந்தரும்,

''அம்மானை அமுது இன்னமுதே என்று''
—(உள்ளத் திருக்குறுந்தொகை-4) எனத் திருநாவுக்கரசரும்,

''டரவையுண்மண்டளி அம்மானே'' (திருவாரூர்ப் பரவையுண்மண்டளி) எனப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியடியிலும் அம்மானே என வைத்துச் சுந்தரரும், இறைவரை அப்பனாகப் போற்றிப் பாடியுள்ளனர். மாணிக்கவாசகரும் ''அம்மையே அப்பா'' என அழைக்கின்றார். சுவாமிகள் இப்பதிகம் முழுவதும் ''திருப்போரூர் அம்மானே'' என அழைக்கும் முறை அவர் அறுமுகனிடம் கொண்டுள்ள அளவில்லா அன்பினை வெளிப்படுத்துவதாகும். பதிகம் முழுவதும் தன்னை உட்படுத்தியே பல வற்றையும் அம்மானிடம் வேண்டுவதாகப் பாடியுள்ளார்.

---




1. நூலின் பெயர் :
''சக்தி சரணம் ஆயிரம்''
(ஸ்ரீலலிதா சகஸ்ரநாம
இசைச்சித்திர மாலை)

நூ[லா]சிரியர் : கோமுகிவேலன் டாக்டர்
மு.க. தங்கவேலன்

நூல்[வெ]ளியீடு :
திருமதி வள்ளி சீனுவாசன்
40, மோதிலால் தெரு (முதல் மாடி)
தியாகராயநகர்
சென்னை-600017.

விலை : ரூ. [1]5.00 பக்கம் : 80×36 (116)

''சக்தி சர[ணம் ஆயிரம்'' முழுவதும் இசை மயமான ஒரு ப[க்]திப் பிரவாகம், இனிய செந் தமிழ் இசைச் சித்[திரமாலை, பாஷா ரூபிணியாக விளங்கும் ஸ்ரீ]லலிதா திரிபுர சுந்தரிக்கு ... அற்புத இரத்தின ஆ... ரம்'' என்று ஆன்றோர்கள் ... பாராட்டியுள்ளனர். பலர் நூலைப் படித்[து] ...

2, 3. நூல்களின் பெயர்கள் :
இன்று ஒரு தகவல், இரண்டாம் பாகம்
இன்று ஒரு தகவல், மூன்றாம் பாகம்

நூலாசிரியர் :
தென்கச்சி கோ. சுவாமிநாதன்

நூல் வெளியீடு:
கலைவாணி புத்தகாலயம்
158, உஸ்மான் ரோடு
தியாகராய நகர், சென்னை-17.

விலை : இரண்டு நூல்களும் தனித்தனியே ரூபாய். 16.00.

பக்கம் : இரண்டு நூல்களும் தனித்தனியே பக்கம் 118.

தென்கச்சி கோ. சுவாமிநாதன் அவர்களின் நயமான குரலில் வானொலியில் ஒலிபரப்பான வளமான சிந்தனைகளின் தொகுப்பு. வாங்கிப் படித்துப் பயன் பெறலாம்.

4. நூல் பெயர்:
தெய்வ மணம் கமிழும் திரிசூலம்

நூலாசிரியர்கள் :
கி. ஸ்ரீதரன் எம்.ஏ.
கோ.முத்துசாமி எம்.ஏ. பிஎட்.

வெளியீடு : அருள்மிகு திரிசூலநாத சுவாமி திருக்கோயில்
திரிசூலம், சென்னை-600100.

விலை : ரூ. 5.00 பக்கம் : 82.

தொல்பொருள் ஆய்வுத்துறையில பணியாற்றும் நூலாசிரியர்கள் இருவரும், அரிதின் பாடுபட்டு, கல்வெட்டுகளைப் படியெடுத்து நுணுகி ஆராய்ந்து, இத்தல வரலாற்று நூலை மிகச் சிறப்பாக எழுதியுள்ளார்கள். பாராட்டத்தக்க நன்னூல் இந்நூல்.



# கீதைக்குறள்கள்

அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

## 5. துறவு நிலை விளக்கம்

(சன்யாச யோகம்)

கண்ணா! கருமத்தைச் செய்யாமை
நன்றாமோ ?
அன்றதனைச் செய்தலோ நன்று? (அருச்சுனன்)

இரண்டுமே நன்றெனினும் ஏற்றமு டைத்தாம்
திரண்டயோகக் கர்மச் செயல் (5[2)

விருப்பும் வெறுப்பும் இலானே துறவி ;
இருமையாம் பந்தமில் லான். (5[3)

சாங்கியமும் யோகமும் என்றும் சமமாகப்
பாங்குடன் நல்கும் பயன். (5[4)

இரண்டும் சமமெனும் உண்மையை என்றும்
திரமாகக் கொள்தல் தெளிவு. (5[5)

கர்மயோகம் ஆற்றுவோர்க்கே கர்மத்
துறவுகிட்டும்;
கர்மயோகி சார்வான்பிர் மம். (5[6)

ஒருங்கே மனம்புத்தித் தூய்மை யுறுமாம்
கருமயோ கத்தால் கனிந்து. (5[7)

தன்புலனை வென்றோனே தன்ஆன்மா
வைப்பிற
மண்ணுயிர் தோறுங்காண் பான். (5[7)

அத்தகையோர் செய்யுங் கருமத்தால்
அன்னார்க்கு
எத்தகைய கட்டும்நே ராது. (5[7)

பார்த்தல் அருந்தல் பகர்தல் முதல்யாவும்
ஓர்ந்திடின் நும்செயல் அன்று. (5[8)

அச்செயல்கள் ஐம்புலன் செய்கையெனக்
கர்மயோகி
துச்சமெனக் கொள்வான் துணிந்து. (5[9)

தாமரைமேல் நீர்த்துளிபோல் சாராது
உன்செயலை
ஏமமென ஈசனுக்கே யாக்கு. (5[10)

ஐம்பொறியால் ஆற்றும் கருமங்கள் யோகிக்குத்
தம்சித்த சுத்திக்கே யாம்.

ஒன்றும் மனத்தான் ஒருபயனும் நோக்காது
நன்றுமனச் சாந்திபெறு வான். (5[12)

ஒன்றாத பேய்மனத்தான் பேராசை உந்தவே
என்றுங்கட் டுண்டுகிடப் பான். (5[12)

நவவாய் உடல்மகிழ் யோகி தொழில்செய்
பவனுமில், செய் விப்பனும் இல். (5[13)

செய்திடச் செய்துப் பயனையும் நோக்கிடச்
செய்வதீசன் அல்ல; இயல்பு. (5[14)

ஞானத்தைச் சூழ்ந்த அறியாமை யாமிருளால்
ஆனதே பாவபுண்ணி யம். (5[15)

ஆன்ம அறிவினால் அஞ்ஞானம் நீங்கியோர்
காண்பர் பரம்பொருளை நன்று. (5[16)

பற்றற்றோன் பாதத்தைப் பற்றினோர்
தானதுவாகிப்
பெற்றிடுவர் மேலாம் பதம். (5[17)

அத்தகையோர் தூய அறிவால்தம் பாவமெலாம்
அத்தமித் துப்பிறவார் மீண்டு. (5[17)

ஞானியற்கு அந்தணனும் நாய்தின் புலையனும்
ஆனிறையும் வித்தியும் ஒன்று. (5[18)

கோடாது, வேற்றுமையில் குன்றாத ஒன்றினை
வீடாது கொள்பிர்ம மென்று. (5[19)

ஒன்றாக இன்பதுன்பை உள்குவோர் பிர்மத்தில்
ஒன்றிமயக் கம்தெளிந் தோர். (5[20)

புறப்பொருள் பற்றாத் திடமனம் போற்றின்
பெறலாம் தியானத்தில் இன்பு. (5[21)

புறவுறவால் இன்பதுன்பம் பூத்து மடியும்
அறவோர் அதிற்காணார் இன்பு. (5[22)

வெகுளியோ டாசையின் வேருங் கெடுத்தோர்
தகுதிமிகு யோகியா வார். (5[23)

உள்ளொளி பெற்று உகந்திடும் தன்மையோன்
தெள்ளிய பிர்மமே யா வான். (5[24)

பற்றுவிட்ட மாமுனிவோர் பாவமின்றித்
தன்னடக்கால்
பெற்றிடுவர் பிர்மநிர்வாணம். (5[25)

காமம் வெகுளி கடிந்தோர் அடக்கமுடன்
ஆன்மஅறி வால்பெறுவர் பேறு. (5[26)

புருவ நடுவினில் பார்வையைப் பூட்டி
இருவகைமூச் சைச்சமன் செய். (5[27)

புலன்களு டன்மனம் புத்திகளைக் கூட்டி
விலக்குசினம் ஆசையச் சம். (5[28)

இவ்வழி நிற்போர் இனிதுவீடு பெறுவராம்
எவ்வகைத் துன்பமி லாது. (5[29)

(தொடரும்)

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தன்னைத் தானே அழித்துக் கொள்கின்றது. இந்த நிலையில் புரியும் செயல்களெல்லாம் வெறுப்பனவே ஆகும்.

உயிருக்கு நன்மை தருவதை பின்பற்றாமல் தீமையைக் கொண்டு சேர்க்கும் காரியங்களிலே ஈடுபடுவதே சிறுமையாகும். இந்தத் தீமைகளால் உயிரானது அல்லல்பட்ட நிலையில் வாழ்நாட்களை வீணடிக்கின்றது. பிறவி என்கிற பெருங்கடலிலே நீந்தும் நிலை அறியாது, மூச்சு முட்டி தனியாகக் கிடந்து உயிர் தத்தளிக்கின்றது. அலைஅலையாக துன்பங்கள் உயிரை அங்குமிங்கும் மோதி அலைக்கின்றன. பெண் என்கிற சூறாவளி உயிரை சுழற்றி எறிந்து, ஆசை என்கிற சுறாமீனின் வாயிலே தள்ளுகிறது. இந்தத் துன்ப நிலையில் உயிருக்கு யாதொரு பற்றுக் கோடும் இல்லை. ''இறைவா! இறைவா!'' என்று அழுது தீர்த்தாலொழிய இந்தத் துன்பம் நீங்காது.

... ... யான், இடர்க் கடல் வாய்ச்
சுழிசென்று, மாதர்திரை பொர, காமச்
சுறவு எறிய
அழிகின்றனன்; உடையாய்! அடியேன் உன்
அடைக்கலமே!''
(திருவாசகம்-அடைக்கலப் பத்து 409)

நாம் தேடி அடைய வேண்டியது இறைவனுடைய அருளாகும். ஆனால், நாம் அறியாமைஎனும் இருளில் மூழ்கி உடலைச் சார்ந்த அனுபவங்களை எந்நேரமும் பின்பற்றித் திரிகின்றோம். இறைவனுடைய அருள் எல்லைக்குள் நாம் இருந்தாலும், சிற்றின்ப வாழ்வை நாம் எல்லாவற்றிலும் மேலாக கொண்டிருப்பது நமது சிறுமையே ஆகும். பாற் கடல் ஒன்று உண்டு. அதில் வாழும் மீன்களுக்கு பாற்கடலே ஆதாரமாகும். ஆனால், அதனை உணராமல் பாலைக் குடித்து பசி தீராமல், மீன்கள் கீழ்மையான பிராணிகளைப் புசிப்பது போல உயிர்களும் அருள் எல்லைக்குள் இருந்தாலும் பேரின்பத்தை நுகராமல், சிற்றின்பங்களில் மருண்டு நிற்றல் சிறுமையே ஆகும்.

''பால்ஆழி மீன்ஆளும் பான்மைத் (து) அருள்
உயிர்கள்
மால்ஆழி ஆகும் மறித்து''
(திருவருட்பயன்—
உமாபதிதேவ நாயனார்)

இறைவனுடைய திருவடிக்கு உருகித் தவிக்கும் மணிவாசகப் பெருமான், தன்னை இறைவன் உடன் அழைத்துச் செல்லவில்லையே என்று ஏங்குகின்றார். இறைவனுடைய சேவடி சேர தகுதி பெற்ற அடியார்கள், பழுத்த மனத்து அடியார்கள் இறைவனின் துணை கொண்டவர்கள். ஐந்தெழுத்து என்னும் தெப்பம் பற்றி பிறவிக் கடலை தாண்டும் தகுதியுடையவர்கள். வெகுளி மயக்கங்களை இன்னதென்று தெரிந்து கொண்டு திருவருளால் அவற்றிடமிருந்து தங்களை விளக்கிக் கொண்டவர்கள். ''நின் கழல் துணை கொண்டு இழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்''. இறைவனுடைய திருவடி நிழலின்கீழ் கிடக்கத்தக்கனவெல்லாம் பெற்றவர்கள். பெற வேண்டியது இறைவனுடைய திருவருளாகும். அதற்கு மேலான செல்வமும் இல்லை. அருட்செல்வத்தை பெற முயலாமல் பொருட்செல்வத்தை நாடி அலைவது சிறுமையாகும். இந்தச் சிறுமைக்குக் காரணம் அறியாமையே. தன்னைப் பற்றிய அறியாமை. இறைவனைப் பற்றிய அறியாமை. இறைவனை உணர்ந்து கொள்வதற்குரிய முறைகளைப் பற்றிய அறியாமை. இவ்வாறு அறியாமை எனும் இருளிலே மூழ்கி செய்யத்தகாதவற்றைச் செய்வது சிறுமையே ஆகும்.

இந்த அறியாமையை நீக்கஇறைவனுடைய திருவருளே வழிகாட்டும். அவனுடைய திருவடிகளிலே தஞ்சம் புகுந்தாலொழிய இந்த அறியாமை நீங்காதே,

''பிரிவு அறியா அன்பா, நின் அருள் பெய்
கழல் தாள்-இணைக் கீழ்,
மறிவு அறியாச் செல்வம் வந்து பெற்றார்,
உன்னை வந்திப்பது ஓர்
நெறி அறியேன்; நின்னையே அறியேன்;
நின்னையே அறியும்
அறிவு அறியேன்; உடையாய்! அடியேன்
உன் அடைக்கலமே.',
(திருவாசகம்-அடைக்கலப்பத்து—414)

ஆன்மாக்கள் இறை அருளின் வியாபகத்திலேதான் தங்கி இருக்கின்றன. அவன் அருளின்றி வேறொன்றும் இல்லை. அவ்வாறு தங்கியிருப்பினும், அருள் நிலையினை அறிந்து கொள்ள இயலவில்லை. இதற்குக் காரணம் ஆணவ மலமே. இதையும் ஆன்மா உணருவதில்லை. ஆணவ மலம் உயிரினுடைய அறிவை மறைத்துத் தான் என்கிற நினைப்பில் உயிரை நிற்கச் செய்கிறது. செயல்களைப் புரியத் தூண்டுகிறது. உடலும், உடலின் கருவிகளும் உயிரோடு சார்ந்து நிற்கும் காரணத்தினால் அவற்றைத் தவிர வேறொன்றும் இல்லை என்கிற உணர்வினை ஏற்படுத்துகிறது. உயிர் அறிவுடைய பொருள் என்று அருளாளர்கள் நமக்கு விளக்கியுள்ளார்கள். எனினும் உயிரானது சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்பினைப் பெற்றிருக்கின்றது. பளிங்கைப் போல,. ஆகவே, கருவிகளைச் சார்ந்து நிற்கும் பொழுது, கருவிகளின் இயக்கத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி ஒரு மறைப்பு நிலையில் இருக்கிறது. ஆணவம் என்கிற மலத்தினால் உண்மை அறிவு மறைக்கப்பட்டு உயிரானது பாசத்துடன் பொருந்தி, பாச காரியங்களுக்காக உடலையும், உடலின் கருவிகளையும் பயன்படுத்திக் கொள்கிறது

அத்தகைய வாழ்க்கையை மணிவாசகப் பெருமான் சிறுமை என்று வெறுக்கிறார். தான் அத்தகைய வாழ்க்கை நடத்தவேண்டியிருந்தது குறித்து தன்னையே ஏசிக் கொள்கிறார். சிறுமைக்கு எல்லையாகத் தன்னை குறித்துக் கொள்கிறார். ''யாவர்க்கும் கீழான அடியேனை'' என்று கூறுகிறார். இறைவனுடைய அறிவு ஆற்றல் எல்லையற்றது. தனது அறிவு சிறியது என்பது மட்டுமல்ல இதன் கருத்து.

அறிவு சிறியதாக இருந்தாலும், அந்த அறிவையும் இறைவன் திருவடிகீழ் செலுத்தாது மகளிரை நினைந்து, உருகி, காம உணர்விற்கு தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பொய்யான சாதனைகளைப் புரிதலை சிறுமை என்று தெரிந்துகொள்ளவேண்டும். வலியதீவினைகளில் அகப்பட்டு இடர்ப்படுவது சிறுமை. தனக்குத் தானே கேடு தேடிக் கொள்வது இதன் விளைவாகும். இதையெல்லாம் நினைந்து நினைந்து இரங்கும்அடிகளார்''நான் சாவேன்சாவேனே'' என்று கூறிக் கொள்கிறார். தனது தளர்ந்த உள்ளத்தை இறைவன் தேடி வந்து சேர்ந்து கொண்ட போதிலும், தன்னைவிட்டு தனது சிறுமை போகவில்லையே என்று வருந்தி, நெசவுப்பாவில் சுற்றி சுற்றி வரும் குழல்ம்பால தவிக்கும் உள்ளத்தை ''ஆ! கெடுவேன்'' என்று கூறி நொந்து கொள்கின்றார். ''பா இடை ஆடு குழல் போல், கரந்து, பரந்தது உள்ளம்; ஆ! கெடுவேன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே'' என்றார்.

சிறுமைக்குக் காரணம் அறியாமை. ஆணவ மலத்தினால் அறியாமை என்கிற இருள் உயிரை சிவத்திடமிருந்து பிரித்து வைக்கின்றது. இறைவனார் வாரி வழங்கும் அருள் அனுபவத்தை பலவாறு பெற்றுக் கொண்டிருந்தாலும் அதை நாம் அறியாமை இருளின் காரணமாக உணருவதில்லை. நான் என்கிற எண்ணம் இருக்கிற வரை இந்த நிலைமை தொடரும். இறைவனின் அருள் அமுதை இடைவிடாமல் பருகுவதற்கு தடையாக இருப்பது நான் என்கிற உணர்வேயாகும். நான் என்கிற உணர்வு தன்னை ஒரு தனிக்கூறாக பிரித்துக் காணும் உணர்வாகும். புறப்பற்றுகளுக்கு காரணமாக இருப்பதும் இந்த உணர்வே. பொருள்கள் மீது நமது ஆசையைச் செலுத்தி, அவற்றைப் பற்றிக் கொண்டு, நமதாக்கிக் கொள்ள நம்மைத் தூண்டிவிடுவதும் அந்த உணர்வேயாகும். இந்த உணர்வே சிறுமைக்கு அடையாளமும் ஆகும். இந்த உணர்வு நீங்க நீங்க சிறுமையும் நீங்கும். அந்த உணர்வு நீங்காத வரை நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும்இறைவனுடைய அருள் கடல்போல் நம்மைச் சுற்றி இருந்தாலும் நாம் அதை அனுபவிக்க தகுதியற்றவர்கள் ஆகின்றோம். நாம் இருப்பதும், இயங்குவதும், சாவதும், பின்னர் பிறப்பதும் நம்முடைய வினைப்பயன் ஆயினும், அந்தப் பயனை நம்மிடம் செலுத்தி, நாம் அதனை அனுபவிக்க காரணமாக இருப்பவனும் இறைவனாவான். இதை அறியாமல் அந்த அனுபவத்தையெல்லாம் பெற்று, அதற்குத் தானே காரணம் என்று சொல்லிக் கொள்வது நம்முடைய ஆணவ மலத்தின் செயலேயாகும். அதனால்தான், உன் அருள் அமுதத்தை நீ வாரி வழங்கி கொடுக்கின்றாய். ஆனால், அதனை ''நான்'' என்கிற உணர்வுடன் விழுங்கி வருகிறேன். அதிலே ஒரு தனித்தன்மை இருக்கின்றது. என்னுடைய வினைகள் இன்னும் தொடருகின்றன. ஆகவே, இறை அனுபவம் தடைப்படுகின்றது. எனவே, நான்'விக்கினேன் விக்காது தடையின்றி உன்னுடைய அருளாகிய தேன்போன்ற நீரை தொடர்ந்து பருக அருள் புரிய வேண்டும்'' என்று கேட்டுக் கொள்கின்றார்.

''வழங்குகின்றாய்க்கு உன் அருள் ஆர்
அமுதத்தை வாரிக் கொண்டு,
விழுங்குகின்றேன்; விக்கினேன் வினையேன்,
என் விதி இன்மையால்;;
தழங்கு அரும் தேன் அன்ன தண்ணீர் பருகத்
தந்து, உய்யக் கொள்ளாய்;
அழுங்குகின்றேன்; உடையாய்! அடியேன் உன்
அடைக்கலமே.''

(திருவாசகம்-அடைக்கலப்பத்து—415)

சிறுமை தன்னை பித்தனாக்கிவிட்டது என்கிறார் மாணிக்கவாசகர். இறைவன் அவரை ஆட்கொள்ளுமுன் உலக வழக்கியலில் பித்தம், ஆட்கொண்ட பின்னர் பேரின்பத்தில் பித்தம். உலக இயல் வினைக்கடலை கூட்டுகிறது. பல பிறவிகளுக்கு வித்திடுகிறது. அருள் அனுபவம் இந்த வினைக்கடலைக் கடக்க உதவும் தோணியாக வந்து அருந்துணையாக அமைகிறது. ஆண்டவனுடைய திருவுள்ளம் ஒரு போதும் தன்னைவிட்டு பிரியாதிருக்கிறது. ஆனால், தானே அதிலிருந்து தனிப்பட்டு, தீவினைப் பயன் நுகர்ச்சியில் வருந்தும் நிலையை ''அடி நாயேனை'' என்று கூறி வருந்தும் அடிகளார், இறைவன் தன்னைக் காப்பாற்றி, கைகொடுத்து, கரையேற்றிய நிகழ்ச்சியைக் கண்டு ''அற்புதம், அற்புதம்'' என்று வியந்து கொள்கிறார்.

''வணங்கும் இப் பிறப்பு, இறப்பு, இவை
நினையாது,
மங்கையர் தம்மோடும்
பிணைந்து, வாய் இதழ்ப் பெரு வெள்ளத்து
அழுந்தி, நான்
பித்தனாய்த் திரிவேனை,
குணங்களும், குறிகளும், இலாக் குணக் கடல்
கோமளத் தொடும் கூடி,
அணைந்து வந்து, எனை ஆண்டு கொண்டு,
அருளிய—
அற்புதம் அறியேனே!''

(திருவாசகம்-அற்புதப் பத்து—572)

—(தொடர்ந்து வரும்)

## வாசகர் எண்ணங்கள்

திருமந்திரத்திற்கு விளக்கம் அளிக்க வந்த சின்ன திருமூலர் அருள்மிகு டி வி. வெங்கட்ராமன் அவர்களின் அருளாளர்களின் அருள் அனுபவம், பருகத் திகட்டாததேவாமிர்தம். ''திருக்கோயில்'' இதழுக்கு மணிமகுடமாக இருக்கும் உங்கள் அனைவரின் தெய்வீகத் திருத்தொண்டிற்குச் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

**ந, தில்லை அருள்,**
**புதுவை வானொலி நிலையம்**
**புதுவை-605006.**

# இந்திய அரசின் "பத்மஸ்ரீ" விருது பெற்ற இந்து அறநிலையத் துறை

## ஸ்ரீ முத்து முத்தையா ஸ்தபதி



ஸ்ரீ முத்து முத்தையா ஸ்தபதி, தமிழ்நாட்டின் பிரபலமான சிற்பக் கலைஞர். இவர் பல திருக்கோயில்களைப் புதிதாகக் கட்டியும், புதுப்பித்தும் சிற்பக்கலைக்கு உயிரோட்டம் கொடுத்திருக்கிறார்.

ஸ்ரீ முத்தையா ஸ்தபதி 1941-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ஆம் தேதி தேவகோட்டைக்கு அருகிலுள்ள எழுவங்கோட்டை என்ற இடத்தில் பிறந்தார். இளம் வயதில் சில்ப ஆகமங்கள், சாஸ்திரங்கள் மற்றும் பரிமாணங்களைச் சிறந்த முறையில் மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியில் 1957 முதல் 1961 வரை கற்றுத் தேர்ச்சி பெற்றார். அதன் பிறகு, இந்தியாவின் பல இடங்களில் திருக்கோயில்களைக் கட்டியதுடன், நூற்றுக்கணக்கான அழகிய திருஉருவச் சிலைகளையும் வடித்துள்ளார்.

135 அடி உயர மூன்று நிலை சிவ, சக்தி, விஷ்ணு கோவில்கள் திரிவேணி சங்கமம், அலகாபாத்திலும், ஸ்ரீநடராஜா கோவில் 4 ராஜகோபுரங்களுடன் சதாரா (மஹாராஷ்டிரா) விலும், 175 அடி உயர 9 நிலைகள் கொண்ட மிக அழகிய ராஜகோபுரம் தென் காசியிலும், ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் நியூடெல்லியிலும், ஸ்ரீஆத்யகாத்யாயினி கோவில் சத்தர்பூர், நியூடெல்லியிலும், ஸ்ரீ ராமர் கோவில் ஜாம்ஷெட்பூரிலும், 130 அடி உயர ஸ்ரீ வரதராஜஸ்வாமி கோவில் ராஜகோபுரம் காஞ்சிபுரத்திலும், ஸ்ரீ காமாட்சி அம்மன் கோவில் திருப்பணி காஞ்சிபுரத்திலும், இவர் செய்த திருப்பணிகளுள் சில.

முழுதும் கற்களாலேயே அமைக்கப்படும் முருகனின் ஆறுபடை வீடுகள் கோவில் திருப்பணி பெசண்ட் நகரில் நடந்து வருகின்றது.

இந்தியாவில் மட்டுமன்றி அமெரிக்காவில் நியூயார்க், ஹூஸ்டன், பிட்ஸ்பர்க், லாஸ் ஏஞ்சல்ஸ், சான்ஃபிரான்சிஸ்கோ, சிகாகோ, பாஸ்டன், அட்லாண்டா, நாஷ்வில், வாஷிங்டன், டல்லாஸ் போன்ற இடங்களில் பல திருக்கோயில்களைக் கட்டியதுடன் விக்ரஹங்களும் செய்து கொடுத்துள்ளார். தாய்லாந்தில் பாங்காக் நகரில் ஸ்ரீ மஹாமாரியம்மன் கோவிலும் இவரது கைவண்ணமே.

நங்கநல்லூரில் அமைந்துள்ள 32 அடி ஸ்ரீஆஞ்சநேயர் கருங்கல் விக்ரஹம், மயிலாப்பூரில்உள்ள 15 அடி ஸ்ரீஆஞ்சநேயர் விக்ரஹம், ஹைதராபாத் பிர்லாமந்திர், 23 அடி உயர ஸ்ரீ கிருஷ்ணர் விக்ரஹம், 60 அடி ஸ்ரீகிருஷ்ணர் விக்ரஹம் மற்றும் 60அடி உயர ஸ்ரீஆதிசங்கரர் விக்ரஹமும் இவர் செய்தமற்றும் செய்து வரும் விக்ரஹங்களும் இவர் புகழுக்குப் பெருமை சேர்ப்பன.

ஸ்ரீ முத்தையா ஸ்தபதிக்கு 1976-ஆம் வருடம் காஞ்சி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளினால் 'சில்ப கலாமணி' என்ற பட்டம் காஞ்சிபுரம் ஸ்ரீ காமாட்சியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தின் போது வழங்கப்பட்டது. 1985-ஆம் வருடம் ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளினால் காசி ராஜா 'சில்ப ரத்னாகர' என்ற பட்டத்தை அலகாபத்திலுள்ள ஸ்ரீ திருபுவன கோவில் கும்பாபிஷேகத்தின் போது அளித்தார்கள். நியூயார்க்கிலுள்ள 'ஆத்யாயனா யுனிவர்சல் மிஷன்' இவருக்கு 'மஹோன்னத சில்ப கலாஷிரோமணி' என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தது.

தென்காசி கும்பாபிஷேகத்தின் போது திருமதி சௌந்தரா கைலாசம் மற்றும் 100 கவிஞர்கள் இவருக்கு 'சில்ப கலைச் செம்மல்' என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தார்கள். சென்னை 'மத்ய கைலாஷ்' கும்பாபிஷேகத்தின்போது 'சில்ப சாஸ்திர சிம்மம்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

சீரிய பல திருப்பணிகளைச் செய்து வரும் ஸ்ரீ முத்தையா ஸ்தபதி, தற்சமயம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையில் 'ஸ்தபதி' யாக மேற்டார்வைப் பொறியாளர் (எஸ். இ.,) நிலையில் கௌரவ பகுதி நேரப்பணி புரிகின்றார்.

இவருடைய சிறப்புமிகுந்த சேவையைப் பாராட்டும் வகையில் நமது இந்திய அரசாங்கம் இவருக்கு ''பத்மஸ்ரீ'' விருது வழங்கிச்சிறப்பித்தது. 6-4-92 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் மேதகு குடியரசுத் தலைவர் திருமிகு **ஆர். வெங்கட்ராமன்** அவர்கள் வழங்க பத்மஸ்ரீ பட்டத்தைச் சிற்ப கலாரத்தினம் ஸ்ரீ முத்தையா ஸ்தபதி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

முகப்படுத்தி ஆயிரம் ஆண்டுகள் அரிய பெரிய மாதவஞ் செய்தான்.

அவனுடைய தவத்திற்கு இரங்கிய சிவ பெருமான் வெள்ளியங் குன்றில் பவளக் குன்று தோன்றியது போல, வெள்விடை மீது தோன்றி யருளினார். தட்சன் பரமனைப் பல முறை பணிந்து போற்றினான்.

தயாநிதியாகிய சிவபெருமான், 'தவத்திற் சிறந்த தட்சனே! உனக்கு என்ன வரம் வேண்டுப கேள்'' என்றார். தன்னேரில்லாத தலைவ ராகிய சம்புவிடம் தட்சன் பிறவி மாசற முக்தி நலம் கேட்டாரில்லை. காமதேனுவிடம் காடி நீரை ஒருவன் கேட்டது போலவும், கற்பகத் தினிடம் ஒருவன் கண்ணாடித் துண்டைக் கேட் டது போலவும் தட்சன் வரங் கேட்டனன்.



கண்ணுதற் கடவுளே! நிலவுலகம், கந்தர்வ வுலகம், சத்தியலோகம் வைகுந்தம் முதலிய எல்லாவுலகங்களிலும் நான் ஆணை செலுத்தி ஆட்சி புரிய வேண்டும். உம்மை வணங்குவோர் யாரும் என்னை வந்து வணங்க வேண்டும். வானவரும் வானவரும் என் கட் டளைக்கு அடங்கி நடக்க வேண்டும். உமது பாகம் பிரியாத பராசக்தி எனக்கு மகளாகவும், அந்த அம்பிகையை தேவரீர் மணந்து எனக்கு மருமகனாகவும் வரவும் வேண்டும்'' என்று

# கந்தவேள் கருணை



டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

(51)

உலகங்களுக்குள் உயர்ந்து ஒளி மயமாய் விளங்குவது சத்தியலோகம். இதன் தலை நகரம் மனோவதியாகும். தேவர்களும் முனிவர்களும் புதல்வர்களும் புடைசூழ மணித் தவிசில் பிரமதேவர் வீற்றிருந்தார். அவர் ஜெபமாலை, கமண்டலம், வேதம் இவைகளைக் கரத்தில் ஏந்திப் படைப்புத் தொழில் புரிந்து கொண்டிருந்தார். படைப்புத் தொழில்மேலும் இனிது நடைபெறும் பொருட்டு முதலில் தட்சன் என்ற புதல்வனை உண்டாக்கினார். பின்னும் மரீசி முதலிய ஒன்பது புதல்வர்களை யுண்டாக்கினார்.

ஒரு நாள் புதல்வர்களில் மூத்தவனும் கல்வி கேள்விகளிற் சிறந்தவனுமாகிய தட்சன் ''தந்தையே! மூவருக்குந் தேவருங்கும் தலைவரும், ஞானமூர்த்தியும், உயிர்க்குயிராகி நிற்பவருமான இறைவர் யார்? அதனை எனக்கு உரைத்தருளும்'' என்று கேட்டான்.

பிரமதேவர் 'மகனே! நாராயணரும் நானும் யாமே பிரமம்' என்று கூறி மலைந்த போது அருட்பெருஞ்சோதியாகத் தோன்றியருளிய சிவமே பரம்பொருள். சிவமூர்த்திக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லை'' என்றார்.

தட்சன் 'பிதாவே! படைப்புத் தொழில் புரிகின்ற உம்மையும், காத்தல் தொழில்புரிகின்ற நாராயணரையும் பார்க்கினும், சங்காரத் தொழில் புரியும் சிவமூர்த்தி உயர்ந்தவர் என்பதற்குக் காரணம் யாது? என் மனம் தெளியக் கூறுவீர்'' என்று மீண்டுங் கேட்டான்.

பிரமதேவர் கூறினார். 'மகனே, நீ என்பால் வேதங்களையெல்லாம் ஓதியும் உனக்குச் சிந்தையில் தெளிவு ஏற்படவில்லை. சங்காரத் தொழிலில் சிருஷ்டி, ரட்சகம் என்ற இரு தொழில்களும் அடங்கும். சிவபெருமான் ஒருவரே சர்வ சங்கார காலத்திலே அகில உலகங்களையும் எங்களையும் ஒடுங்கச் செய்கின்றார். சூரியன் முன்னே ஆம்பல் குவிதலும் பயிர் தழைப்பதும் தாமரை மலர்தலும்போலே சிவசந்நிதியில் ஐம்பெருந் தொழில்களும் நடைபெறுகின்றன. பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூவர்க்கும் சிவமே தலைவர். அவரை வேதத்தில் 'சதுர்த்தம்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

மகனே! வேதத்தில் மற்றவரைப் பிரமம் என்று கூறுவது மூகமனாகும். நதிகள் யாவும் கடலையே யடைவது போல் ஆன்மாக்கள் யாரை வணங்கினாலும் அவ் வணக்கங்கள் சிவபெருமானையே சேரும். சிவபெருமான் ஆதியும் நடுவும் அந்தமும் இல்லாதவர். எங்கும் நிறைந்தவர். உயிர்க்குயிரானவர். முழுதொருங் குணந்தவர்.

சிவத்தையன்றி எங்களைப் பரம்பொருள் என்று கருதி எமக்கு சிவமூர்த்தியைப் பார்க்கிலும் அதிக சிறப்புச் செய்பவர்க்கு நன்மை விளையாது. நரகமே விளையும். சிவத்துடன் சமம் என்று கூறுவதும் பிழை. அப்பெருமான் தனக்குவமையில்லாதவர். அவரே பசுபதி; நாங்கள் பசுக்கள். நாங்கள் சிவமூர்த்தியை வழிபட்ட ஆலயங்கள் பலப்பல. அவற்றைக் காண்பாயாக. சிவனருள் பெறாது வாழுந் தேவரும் இல்லை ஆதலால் நீ தவத்தைச் செய்து சிவத்தை அடைவாயாக'' என்று கூறினார்.

''பதியரன் பாசந் தன்னில் பட்டுழல் பசுநாம்
என்றே
விதியொடு வேதங் கூறும் மெய்மையைத்
தெளியவேண்டின்
இதுவென உரைப்பன் யாங்கள் இவவரசியற்ற
ஈசன்
அதிர்கழல் அருச்சித் தேத்தும் ஆலயம் பலவுங்
காண்டி''

''அவனருள் பெறாது முத்தி அடைந்தனர்
இல்லை; அல்லால்
அவனரு ளின்றி வாழும் அமரரும் யாரும்
இல்லை
அவனருள் எய்தின் எய்தா அருப்பொருள்
இல்லை; ஆணை
அவனல திறைவன் இல்லை அவனைநீ அடைதி
யென்றான்''

பிரம்ம தேவரால் சிவபெருமானுடைய பெருமைகளைக் கேட்டான் தட்சன். பண்டை வினைப்பயனால் அவனுடைய உள்ளம் முக்தி நலத்தை விரும்பாது ஆட்சிப் பதவியை விரும்பியது தந்தையிடம் விடைபெற்று பிரமதேவருடைய மனத்தினின்றும் தோன்றிய மானச சரோவரத்தை யடைந்தான் பிராணவாயுவால் மூலத்தழலை யெழுப்பி, மனத்தை ஒரு


சித்திரபாரதம்
க.வ.: செவ்வேள்
ப.: MN ராஜா
“அத்தினாபுரிக்கு அரசே! நீர் எம் குபேர புரிக்கு வந்ததும் யான் செய்தவமே.” என்று தருமரைப் போற்றி, அனைவருக்கும் விருந்தளித்து உபசரிக்கிறார் குபேரர்.
நேற்று நான் இந்திரனின் அமராவதிக்குச் சென்றிருந்த போது மகாவீரனான உன் தம்பி அர்ச்சுனனையும் கண்டு மகிழ்ந்தேன்!
“விரைவில் அர்ச்சுனன் பூவுலகு வந்து உமக்கு உற்ற துணையாவான். பூவுலகம் முழுவதும் இனி உமக்கே உரிமை ஆகும்” என்று மங்கல மொழிகளைக் கூறி ஆசீர்வதிக்கிறார் குபேரர். வீமன் நாடிவந்த நறுமண பொற்றாமரை மலர்களுடன் நவ மணிகளையும் ஆடை ஆபரணங்களையும், வெற்றி தரும் ஆயுதங்களையும் வழங்கி ஆசீர்வதித்து அனுப்புகிறார் குபேரர்
தருமரும், வீமனும், கடோற்கசனின் பறக்கும் தேரில் ஏறி உரோமச முனிவருடன் மீண்டும் நந்தி சேன வனம் வந்து சேருகிறார்கள். “நினைத்த போதெல்லாம் விரைந்து வந்து எனக்கு வேண்டுவன செய்யும் நின்னை மகனாகப் பெற்றது நான் செய்த பெரும் பேறு” என்று அன்புடன் கடோற்கஜனை ஆசீர்வதித்து அளவிலாப் பரிசுகளுடன் இடும்பவனத்திற்கு அனுப்பிவைக்கிறார் தருமர்
சிவபெருமான் அளித்த பாசுபதத்தோடும், தேவேந்திரன் அளித்த அளவிலாத சன்மானங்களோடும் அர்ச்சுனன் நந்தி சேனவனம் வர, அளவிலா மகிழ்ச்சியடைகிறார் தருமர்
பாண்டவர்கள் இவ்வாறு வனவாசம் வாழ்ந்து வரும் நாளில், அஸ்தினாபுரத்தில் துரியோதனன் அரண்மனைக்குத் துருவாச முனிவர் வந்து சேருகிறார்.
விருந்துபசாரங்களால் துருவாசரையும் அவருடைய சீடர்களையும் மனங்குளிர வைக்கிறான் துரியோதனன்.

வரம் கேட்டான். எம்பெருமான் அவ்வரங்களை வழங்கிவிட்டு மறைந்தருளினார். தட்சன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான்.

தட்சன் பிரமதேவரைத் தன்னிடம் வருமாறு எண்ணினான். பிரமதேவர் தட்சன் பெற்ற வரங்களை நினைத்து வருந்தினார். 'அமுதத்தைத் தடவினாலும் வேம்பு கசக்கவே செய்யும். 'அந்தோ அரிய பெரிய தவஞ்செய்து ஆலமுண்ட நீலகண்ட மூர்த்தியிடம் வீடு பேறு வேண்டாது நாடு புரக்கும் நவையைப் பெற்றானே? என்னே இவன் அறிவு? விதியின் விளைவு'' என்று எண்ணி, தட்சனிடம் வந்து ஆசி கூறினார்.

'தட்சன்' ''தந்தையே! நான் இருந்து ஆட்சி புரிய மாட்சிமை தங்கிய அழகிய நகரத்தை உண்டு பண்ணுக'' என்றான். பொன்னகரும், மற்ற எந்நகரமும் நாணுமாறு ஓர் விசித்திரமான தட்சமாபுரியைப் பிரமதேவர் உண்டாக்கினார். அங்கு அமைத்திருந்த நவமணி மாளிகையில் அரியணை மீது அமர்ந்து தட்சன் ஆட்சி புரிந்தான்.

தேவ குருவாகிய வியாழ பகவானும் இந்திரன் முதலிய எண்திசை அதிபர்களும் ஏனைய தேவர்களும் தட்சனிடம் வந்துஅவனை வணங்கி, அவனுடைய ஆட்சிக்கு அடங்கி அவன் இட்ட ஏவலின் வழி நின்றார்கள்.

தட்சனுடைய வரபலத்தால் இந்திரனாதி இமையவர்கள் அடங்கியதைக் கண்டு அசுரகுருவாகிய சுக்கிரன் மகிழ்ந்து அசுரேந்திரனையணுகி தட்சனிடம் சென்று நட்பு கொள்ளுமாறு ஏவினான். அசுரேந்திரனும் ஏனைய அசுரர்களும் தட்சனிடம் வந்து வணங்கிப் பணி புரிந்தார்கள். ஆதித்தன் முதலிய ஒன்பது கோள்களும், யட்சர்களும் வந்து போற்றி செய்து அவனைப் புகழ்ந்து தட்சனுடைய அன்பைப் பெற்றார்கள். இவ்வாறு அரனார் வரபலத்தால் அயன் முதலிய அனைவரும் தன் ஏவலுச்குள்ளாகுமாறு செய்து தட்சன் வெண்கொற்றக்குடை நிழலிலிருந்து செங்கோலோச்சி பெருமிதத்துடன் ஆட்சி புரிந்தான்.

அயனாருடைய அடிமலரில் தோன்றிய அருந்ததியனைய கற்பின் மிக்க, வேதவல்லியை தட்சன் திருமணம் செய்து கொண்டான்.

நாகம் பல ரத்தினங்களை ஈன்றதுபோல் ஆயிரம் மைந்தர்களைப் பெற்றான். அப்புதல்வர்கள் முப்புரி நூல் தரித்து வேதங்கள்அனைத்தும் ஓதியுணர்ந்தார்கள்.

தட்சன் அம்மைந்தர்களை நோக்கி' ''நீங்கள் மானசவாவியை யடைந்து சிவத்தை வேண்டித் தவத்தைச் செய்து, எல்லா உயிர்களையும் படைக்கும் பரிசு பெற்று வாருங்கள்'' என்று பணித்தான்.

தட்ச குமாரர்கள் மானச மடுக்கரையில் முழுகி அதன் கரையில் நின்று, பொறி புலன்களை வென்று தவம் புரியலானார்கள்.

நாரத முனிவர் தட்ச குமாரர்களிடம் வந்து, அவர்கள் தவஞ் செய்கின்ற காரணத்தைக் கேட்டு கை கொட்டிச் சிரித்தார். ''தட்ச குமாரர்களே! நீவிர் உய்யும் நெறியை உரைப்பேன். ஆன்மாக்கள் தவஞ்செய்து பெறத்தக்கது பிறவாமையேயாகும். படைப்புத் தொழிலைப் பெறும் பொருட்டுச் சிவத்தை நோக்கிச் செயவது மதியுடைமையன்று, படைப்புக் கர்த்தாவாகிய பிரமதேவர் தன் ஐந்து தலைகளில் ஒரு தலையை சிவபெருமான் அரிந்தாரே, அற்ற தலையைப் படைத்துக் கொள்ள முடியாமல் இன்று வரை நான்கு தலையனாக இருப்பதை நீங்கள் அறியவில்லையோ? நீங்கள் வீடு பேற்றை விரும்பாது பதவியை விரும்பித் தவஞ்செயவது நீராடச் சென்றவர் சேறாடி மீள்வதையொக்கும். கற்றவர் போற்றும் கண்ணுதலாரிடம் பதவியை விருப்பிப் பெறுவது பொன் விலங்கு பூட்டிக் கொண்டது போலாகும். எத்துணை இன்பம் உயருமோ அத்துணைத் துன்பமும் உயரும். ஆதலால் மறந்தும் பதவியை விரும்பாது வீடுபேற்றை விரும்பித் தவஞ்செய்யுங்கள்'' என்று கூறி நல்லுரைப்படி அம்மைந்தர்கள் பெருந்தவஞ்செய்து சிவனருளால் வீடுபேறு பெற்றார்கள்.

மக்கள் நாரதருடைய உபதேசித்தால் முத்திநலம் பெற்றதை யறிந்து தட்சன் வருந்தினான். மற்றும் ஆயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்களுக்கு வேதங்களை ஓதுவித்து, ''என் அன்புடைய மைந்தர்களே! நீவிர் சென்று தவம் செய்து சிவபெருமானிடப் படைப்புத் தொழிலைப் பெற்று வாருங்கள்'' என்றான்.

அம்மைந்தர்கள் மானச சரோவரம் போய் மன ஒருமைப் பாட்டுடன் பசுபதியை நாடித் தவம் செய்தார்கள். நாரத முனிவர் அங்கு சென்று அவர்களிடம் ''மாதவம் புரியும் மைந்தர்களே! நீங்கள் வருந்தித் தவஞ் செய்கின்றீர்கள்; கரும்பிருக்க இரும்பை மெல்லலாமோ? பதவியை விரும்புவது பிறவிக்கு ஏதுவாகும். ஆதலால் உம்மீதுள்ள காதலால் கூறுகின்றேன். பற்றற்ற தவஞ்செய்து பரமன்பால் முத்திநலம் பெறுவீர்கள் என்று'' கூறி உபதேசித்துச் சென்றார். அவர்களும் அவ்வாறு தவஞ்செய்து பற்றறுத்துப் பசுபதியருளால் முக்தி நலம் பெற்றார்கள்.

தட்சன் தன் புதல்வர்கள் நாரதரால் மனம் மாறி சிவத்தினைச் சேர்ந்ததையறிந்து பெருஞ் சீற்றம் அடைந்தான். ''என்னுடைய விருப்பத்துக்கு மாறாக ஈராயிரம் புதல்வர்களையும் எனக்கு உதவாமல் செய்த நாரதன் நிலைபேறு இல்லாமல் எங்கும் உழல்வானாக'' என்று சாபமிட்டான். ''இனி நான் ஆண் மக்களைப் பெறாது பெண் மக்களைப் பெறுவேன்'' என்று முடிவு செய்தான். இருபத்து மூன்று பெண்களைப் பெற்றான்

(தொடரும்)





வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம், சென்னை-600002.

# அருள்மிகு
# மாரியம்மன் திருக்கோயில்
## சமயபுரம்

**இலால்குடி வட்டம், : : திருச்சி மாவட்டம்.**

*பசலி 1401 - பஞ்சப் பிரகாரத் திருவிழா*

### முக்கிய திருவிழா நாட்கள்

13—5—1992 **புதன்கிழமை :**
*ஏகவசந்த ரிஷப வாகனத்தில் அம்பாள் புறப்பாடு*

14—5—1992 **வியாழக்கிழமை :**
*பஞ்சப்பிரகார மஹோற்சவம்— வெள்ளி விமானம்*

15—5—1992 **வெள்ளிக்கிழமை :**
*அம்பாள் தங்க சிம்ம வாகனத்தில் புறப்பாடு*

16—5—1992 **சனிக்கிழமை :**
*அம்பாள் முத்துப் பல்லக்கில் புறப்பாடு*

17—5—1992 **ஞாயிற்றுக்கிழமை :**
*அம்பாள் தங்க கமல வாகனத்தில் புறப்பாடு*

18—5—1992 **திங்கட்கிழமை :**
*அம்பாள் வெள்ளிக் குதிரை வாகனத்தில் புறப்பாடு*

19—5—1992 **செவ்வாய்க்கிழமை :**
*அம்பாள் வெள்ளிக் காமதேனு வாகனத்தில் புறப்பாடு*

**அனைவரும் வருக! அம்மனின் திருவருள் பெருக!!**

**ஜி. இராஜநாயகம்,** *பி.ஏ., பி.எல்.*
*துணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்கார்.*




மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 13.4.92 தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள் அன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத் திருக்குளத் திருப்பணியைத் துவக்கி வைத்துச் சிறப்பிக்கிறார்கள்.